மன்றம்

வார ஏடு — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.

மலர் 6—இதழ் 34 ★ 22-12-57 சென்னை ★ விலை 16 காசு

அரிசியில் பஞ்சம்!

6, 7 மாதங்களுக்கு அரிசி கிடைக்காது.

—(0)—

பாருக்குப் பஞ்ச சீலம்; பாரதத்துக்குப் பஞ்சக் கோலம்!

—(0)—

ஔவையார் ஒரு சமயம் ஒரு திருமண விருந்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பினாராம். ஔவையார் என்று இங்கே குறிப்பிடப்படுவது சங்க காலத்தில் அதிகமான் நெடுமான் அஞ்சி, சேரமான் மாரிவெண்கோ, பாண்டியன் கானப்பேர் தந்த உக்கிரப் பெருவழுதி, சோழன் பெருநற்கிள்ளி போன்ற தமிழரசர்கள் காலத்தில் இருந்தவரல்ல. பிற்காலத்தில் தனிப்பாடல்களில் இடம் பெறுகிற ஔவையாரைப் பற்றிய கதை இது. இந்த ஔவையார் திருமண விருந்துக்குப் போய்த் திரும்பி வந்ததும், சிலர் அவரைச் சூழ்ந்து கொண்டு, "பெருமாட்டியே! அந்தப் பெரிய மனிதர் வீட்டுக்கு திருமணத்துக்குச் சென்றாயே! மிகக்களைத்து இருக்கிறாயே! உண்ட களைப்போ? மிகப்பலமான விருந்தாயிருக்குமே? எப்படிபபட்ட விருந்து, என்னென்ன சாப்பிட்டாய்?" என்று விருந்தைப்பற்றிக் கேட்டார்கள்.

"உண்டேன், உண்டேன், உண்டேன்! என்னைத் தொந்தரவு செய்யாதீர்கள்!" என்று ஔவைப் பாட்டியார் அலுத்து உட்கார்ந்தார்.

"உண்டேன், உண்டேன் என்று மூன்று முறை சொல்வதால், உண்பதே ஒழியாத வேலையாக இருந்தது போலும்! என்னென்ன அந்த விருந்தில் நீங்கள் உண்டது என்பதை மட்டும் சொல்லுங்கள்!" என்று சுற்றிலுமிருந்தவர்கள் வற்புறுத்தினார்கள்.

அதற்கு ஔவையார் "திருமணத்தில் இருந்த கூட்டத்தில் அகப்பட்டு நான் நெருக்குண்டேன், தள்ளுண்டேன், பின் நீள் பசியினால் சுருக்குண்டேன், சோறு மட்டும் உண்டிலேன்!" என்று கூறினார்களாம்.

"உண்டேன், உண்டேன்!" என்று கூறியது சோறு உண்டதை அல்ல, "நெருக்குண்டேன், தள்ளுண்டேன் பசியால் சுருக்குண்டேன்" என்பவைகளே!

ஔவைப் பாட்டியார் சொல்லியதைப் போலத்தான் இந்தியாவிலுள்ளவர்களின் இன்றைய நிலைமை இருக்கிறது!

இந்தியாவிற்கு ஒரு வெளி நாட்டான் வந்தால், பெருமையாகப் பேசுவதற்கு ஏராளமாக இருக்கின்றன!

"உலகத்திலேயே மிகப்பெரிய மலை எங்கள் நாட்டில் இருக்கிறது!

உலகத்திலேயே மிகப் பெரிய அரசியல் சட்டமும் எங்களிடம் இருக்கிறது!

உலகத்திலேயே மிக அதிகமாக மழை பெய்கிற இடம் இந்தியாவில் இருக்கிறது!

உலகத்திலேயே மிக அதிகமாகப் பேசுகிற கிருஷ்ணமேனன் இங்குதான் இருக்கிறார்!

மகாத்மாவின் சமாதி மேடை இங்கே இருக்கிறது! அவருடைய கொள்கைகள் சமாப்தி அடைந்திருக்கும் காங்கிரசுக் கட்சியும் இங்கே இருக்கிறது!

பண்டித நேரு இருக்கிறார்! பரத நாட்டியம் இருக்கிறது!

ஐந்தாண்டுத் திட்டம் இருக்கிறது! பக்ரா-நங்கல் இங்கே இருக்கிறது!

கட்டிடக் கலையில் அதிசயமான தாஜ் மகால் இங்கே இருக்கிறது! நிதித்துறைக்கு "அதிசய மனிதராக" இருக்கும் டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் என்பவர்கூட இங்கே தான் இருக்கிறார்!

உலகத்துக்கெல்லாம் வழி காட்டக்கூடிய தத்துவங்கள் பல இங்கே இருக்கின்றன! உலகத்தில் வேறெங்குமில்லாத தடுப்புக் காவல் சட்டம் இங்கு இருக்கிறது!

அரசியல் பேசும் சாதுக்கள், தத்துவம் உபதேசிக்கும் அரசியல்வாதிகள் இந்தியாவில் ஏராளமாக இருக்கிறார்கள்!

மகுடி ஊதும் பாம்பாட்டிகள், படமெடுத்தாடும் நல்ல பாம்புகள் இருக்கின்றன!

பெரிய பார்லிமெண்ட் கட்டடம் இருக்கிறது, அதில் பெரிய அக்கிராசனர் இருக்கிறார்! தங்களுக்கேப் புரியாமல் பேசுகிற மந்திரிகள் இருக்கிறார்கள், பலருக்குப் புரியாத இந்தி இருக்கிறது!

பெரிய நதிகள் இருக்கின்றன, பெரிய யானைகள் இருக்கின்றன, பெரிய நந்திகள் இருக்கின்றன, "பெரிய மனிதர்கள்" இருக்கின்றார்கள்!"

இவ்வளவு பெருமைகளைச்சொல்லும் பொழுது, அதைக் கேட்கும் வெளி நாட்டார் அப்படியே மலைத்துதான் போவார்.

"விதவிதமான வகையில் இவ்வளவு பெருமைகள் இருக்கும்பொழுது, உங்களுக்கு எந்தக் குறையும் இருக்க முடியாது!"

இந்தப் 'பெரிய' பெருமைகள் எதிலும் இந்தியாவில் உள்ளவர்களுக்குக் குறை கிடையாது. ஆனால்..."

"ஆனால், என்ன?"

"சாப்பிட உணவு இல்லாத குறை ஒன்றுதான்!"

திருமண விருந்தின் பெருமைகளைக் கூற வந்த ஔவைப் பாட்டியார், "நெருக்குண்டேன், தள்ளுண்டேன், சுருக்குண்டேன், சோறு மட்டும் உண்டிலேன்" என்று கூறியதைப்போல, இங்கு உள்ளவர்கள் "அது இருக்கிறது, இது இருக்கிறது, ஆனால் சோறு மட்டும் இல்லை" என்று கூறத்தக்க நிலையில் இருக்கிறார்கள்!

உணவுப் பஞ்சங்கள் திடீர் திடீரென்று எப்படி வருகின்றன? பஞ்ச நிலைமை வரும்வரை அரசாங்கம் என்ன செய்துகொண்டிருக்கிறது? இதுவரை இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களில் கோடிக்கணக்கில் பணம் செலவிட்டால், எதிர் பார்த்த பலன்கள் ஏன் கிடைக்கவில்லை? ஆறேழு மாதங்களில் உணவு நெருக்கடி தீர்ந்து விடுமென பண்டித நேரு எப்படிக் கூறுகிறார்? ஓராண்டுகழித்து மீண்டும் பஞ்சப்பாட்டுக் கிளம்பாது என்பதற்கு என்ன உறுதி?

பண்டித நேருவின் அரசாங்கம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கண்டாக வேண்டும்!

உணவு நிலைமை எப்படி இருக்கிறது என்பதை அரசாங்கமே புரிந்து கொள்ளாத நிலைமையில் இருக்கிறது. "உணவுத் திட்டத்தில் சுய தேவை அளவை நாம் எட்டிவிட்டோம்!" என்று உணவு இலாகா மந்திரி ஒரு சமயம் சொல்கிறார். அதற்குப் பின் நிதி மந்திரி எழுந்து, வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய உணவுத் தான்யங்களுக்காகத் தனி மானியம் கேட்கிறார்! "நல்ல விளைச்சல், விலைவாசி குறைகிறது, இனிக் கவலை இல்லை!" என்று அரசாங்கம் ஒரு அறிக்கை விடுகிறது. அப்பாடா! என்று பெருமூச்சு விடும் நிலையில் "பஞ்ச நிலைமை, உடனே அரிசி" என்ற கூக்குரல் மாநிலங்களிலிருந்து வருகிறது!

இரண்டொரு மாதங்களுக்கு முன் பங்களூரில் பேசிய, இந்திய உதவி உணவு மந்திரி கமம் கிருஷ்ணப்பா அவர்கள், "கடந்த பத்தாண்டுகளில் இந்த ஆண்டுதான் [illegible] அரிசிப் பஞ்சம் இருக்காதென்று கூற முடிகிறது!" என்று சொன்னார்.

இரா. செழியன்

சென்ற வாரத்தில் பேசிய பண்டித நேரு அவர்கள் "அரிசி சாப்பிடுபவர்கள் இன்னும் 6 அல்லது 7 மாதங்களுக்கு அரிசி உபயோகிப்பதைக் [illegible] விட வேண்டும்! அரிசிக்குப்பதில் கோதுமையை உபயோகப் படுத்துங்கள். அதற்குள் நமது உணவுப்

(11-ம் பக்கம் பார்க்க)

காசியில் கலவரம்!

—(o)—

ஆண்டவன் சந்நிதியில் 'அடிதடி, இரத்தம்'!

—(o)—

தீண்டாமை அகல, சாதிப்பாகுபாடு நீங்கவேண்டும்!

—o—

★

பரத கண்டத்தில் இருக்கும் புண்ணிய ஸ்தலங்களில் தலை சிறந்தது காசி!

இந்தத் தலத்தில் அடியவர்கள் எந்த உருவத்தில் தன்னை நினைத்து தியானம் செய்கிறார்களோ அந்த உருவத்தில் சிவபெருமான் காட்சியளித்து முக்தி தருவாராம்! ஆனந்த நடனத்தில் ஒருவர் சிவனைத் தியானித்தால், காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமாக அவர் வருவார்! ஊர்த்துவ நடனத்தில் அவரைப் பார்க்க விரும்பினால் கோபாவேசமாக அவர் நடனமாடி வருவார்! உமையொருபாகனை நினைத்துக் கொண்டால், அவ்வாறு இடப்பக்கம் உமாதேவியாக வலப்பாகம் சிவனாகத் தோன்றுவார்! பைராகிக் கோலம் என்றால் அந்தக் கோலத்தில் வருவார், மோகினி உருவம் என்றால் அதிலும் வந்து பக்தர்களை களிப்பூட்டுவார்! வேண்டுவோர்க்கு வேண்டுவன தருதல் கைலைவாசனின் அருள்! அவ்வாறு சிவனருள் பெருகியிருக்கும் இடம் காசித்தலம்!

எந்தப் பாவம் செய்தாலும், அதைப் போக்கக் காசிக்குச் சென்றால் போதுமானது! காசியில் உயிர் நீத்தால், நேராக மோட்சலோகம் எனப் புராணங்கள் சொல்கின்றன! அது எப்படி சாத்தியமாகிறதென்றால், காசியில் இறந்தவர்களுடைய ஆத்மா என்றால் அது தனியாக ஓரிடத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறதாம், அங்கு தேவகன்னிகைகள் வரவேற்று உபசரிப்பார்களாம். பார்வதிதேவியே நேரில் வந்து அந்த ஆத்மாக்களுக்குச் சிரமப் பரிகாரம் செய்வாராம். அதற்கு அடுத்தபடி காசியில் இறந்தவர்களுடைய ஆத்மாக்களுக்குச் சிவமூர்த்தி தாரக மந்திரத்தை உபதேசிப்பாராம். தாரக மந்திரத்தைக் கேட்டவர்கள் வேறு பேச்சின்றி நேராக மோட்சலோகம் போய் விடுவார்கள்! காசியில் இறந்தால் இவ்வளவு வைபவங்களும் நடைபெறும்!

காசி என்றால் எந்தப் பாபமும் தொலையும் என்று புராணங்கள் கூறுகின்றன. ஆனால் மற்றெங்குமில்லாத அளவு இப்பொழுது பாபாத்மாக்கள் காசியில்தான் இருக்கின்றனர், பத்திரிக்கைச் செய்திகள்படி. காசியில், விசுவநாதசாமி கோவிலில் பெரிய கலகம், அடிதடி, மண்டைத் திறப்பு என்று பத்திரிக்கைச் செய்திகள் கூறுகின்றன! தேவாசுர யுத்தம் என்று புராணங்களில் கதைகள் இருக்கின்றன! காசியில் சனாதனிகளுக்கும் மற்றவர்களுக்கும் கோரமான தாக்குதல் நிகழ்ந்திருக்கிறது! அதிலும் அந்தச் சண்டை ஆண்டவன் சந்நிதியிலேயே நடைபெற்றிருக்கிறது!

அப்படியென்ன ஆண்டவனுக்கு அவமதிப்பு வந்து, கோவிலுக்கு ஆபத்து வந்து சனாதனிகள் அதை எதிர்த்தார்களா என்று பார்த்தால், வந்தவர்கள் ஆண்டவனை வழிபடத்தான் வந்தார்கள்! சிவமூர்த்தியைத் தரிசிக்கத்தான் அங்கு கூடினார்கள்! இருந்தாலும், ஆண்டவனைத் தரிசிக்க வந்தவர்கள் கோவிலுக்குள் நுழையக்கூடாது எனத் தடுக்கப் பட்டிருக்கிறார்கள், மீறி வந்தவர்கள் தடியடிக்கு ஆளாகியிருக்கிறார்கள்!

பூசைபோட வந்தவர்களுக்கு நல்ல "பூசை" கிடைத்தது! அபிஷேகம் செய்து ஆராதிக்க வந்தவர்களுக்கு இரத்த அபிஷேகம் கிடைத்தது! இவ்வளவுக்கும் பக்தர்களைத் துன்புறுத்தும் பாதகர்களல்ல அந்தச் சனாதனிகள்! இன்னும் பார்க்கப்போனால் கோவிலில் பக்தர்கள் தரும் மனுக்களைப் பகவானிடம் புரியச் சொல்லிவிடும் பணியை மேற்கொண்டவர்கள் அந்தச் சனாதனிகள்!

உண்டான குறையெல்லாம் வந்த பக்தர்களிடம்தான்! இந்தப் பக்தர்கள், குலத்தில் "தீண்டத்தகாதவர்கள்!"

தீண்டாமையால் திண்டப்பட்ட அந்தப் பாபாத்மாக்கள், திருநீலகண்டத்தைப் பார்வையால் கூட தீண்ட சனாதனிகள் அனுமதி மறுத்தனர்!

விளைவு, தாக்குதல், கைகலப்பு அடிதடி! பத்திரிக்கைக் கணக்குப்படி அடிதடியால் 10 தாழ்த்தப்பட்டவர்கள் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர், 30 சனாதனிகள் போலீஸ் ஸ்டேஷனுக்குக் அழைத்துச் செல்லப்பட்டனர்!

இது காசியில் — புண்ணிய பூமி என்று கூறப்படும் திருத்தலத்தில் நடைபெற்றது, பத்திரிக்கைகளில் வெளி வந்தது!

நாள்தோறும் இதைப்போல பல கொடுமைகள் ஊர்பேர் தெரியாத இடங்களில் சிறு கிராமங்களில் நடைபெற்றபடி இருக்கின்றன. அவையெல்லாம் பத்திரிக்கைகளில் வெளி வருவதில்லை!

தீண்டாமை அகற்றப்பட வேண்டும்—காங்கிரஸ் தலைவர்கள் கூறுகிறார்கள்! பண்டித நேரு மேடையதிரப் பேசுகிறார்! காங்கிரசுக் கட்சி தீர்மானங்கள் போடுகின்றன!

தீண்டாமை அகற்றப்பட வேண்டும் என்பதை இந்த நாட்டு அரசியல் சட்ட திட்டங்கள் வலியுறுத்துகின்றன!

"தீண்டாமை பாராட்டுவது சட்டப்படி தண்டிக்கப்படும் குற்றங்களில் ஒன்று" என இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவு தெளிவுபடக் கூறுகிறது!

தீண்டாமை கூடாது எனத் தேசத் தலைவர்கள் கூறியபின், அரசியல் சட்டம் வலியுறுத்தியபின், இன்னும் தீண்டாமை எனும் கொடுமை சேரிவாழ் மக்களை வாட்டியபடிதான் இருக்கிறது!

தாழ்த்தப்பட்ட வகுப்பினர்-தாழ்த்தப்பட்ட மலை சாதியினர் பற்றிய அரசாங்கக்குழு தனது ஆறாவது அறிக்கையில் பின்வருமாறு கூறுகிறது: **"அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவின்படி தீண்டாமை ஒழிக்கப்பட வேண்டுமென இருந்தபோதிலும், அந்த வேறுபாடு ஒரு வகையில் இல்லாவிட்டால் மற்றொரு வகையில், கூறப்போனால் பல வகைகளில், எல்லாப் பகுதிகளிலும் குறிப்பாகக் கிராமப் புறங்களில் இன்னும் பாராட்டப்பட்டுதான் வருகிறது. வகுப்பு வேறுபாடுகளும், வகுப்பு விரோதங்களும் இந்தியாவிற்கு முக்கிய அறைகூவல்களாக இருக்கின்றன!"**

இது அரசாங்கம் பார்த்து அமைத்தக் குழு கண்ட முடிவு!

அரசியல் சட்டம் இயற்றப்பட்டு பத்து ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் தீண்டாமைக் கொடுமையை அகற்றுவதில் "அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும்கிடைக்கவில்லை" என அந்தக் குழுவின் அறிக்கை கூறுகிறது!

காசியில், விசுவநாதர் ஆலயத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் நுழையலாமா கூடாதா என்பது தீண்டாமையின் ஒரு

★

பகுதி! கிராமப் புறங்களில் வெள்ளை வேட்டிக் கட்டிக் கொள்வதிலிருந்து குடிக்கத் தண்ணீர் எடுப்பது வரை, காலில் செருப்பு அணிவதிலிருந்து பிணத்தை எரிக்கும் மயானம் வரை, அன்றும் வாழ்வில் ஒவ்வொரு கட்டத்திலும் தாழ்த்தப்பட்டவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்படுகிறார்கள், தீண்டாமை என்ற நச்சரவம் கொட்டியபடி இருக்கிறது!

காசியில், ஆண்டவன் சந்நிதியில், வெளிப்படையாக சனாதனிகளுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மோதுதல் நிகழ்ந்தது!

ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தில் பல பகுதிகளிலும் நாள்தோறும், சனாதனத்துக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் போராட்டம் நிகழ்ந்தபடிதான் இருக்கின்றது! சனாதனம் என்று கூறும்பொழுது பிராமண வகுப்பினரை மட்டும் குறிப்பிடவில்லை; சாதிப் பாகுபாட்டில் தம்மை மேல் சாதிகளான நினைத்துக் கொண்டிருக்கும் முதலியார், செட்டியார், பிள்ளைமார், நாயக்கர்கள், யாரார் சாதி ஏற்றத்தாழ்வுகளைப் பாராட்டுகிறார்களோ, அவர்களெல்லாம் சனாதனத்துக்குத் துணையாக இருக்கிறார்கள், தாழ்த்தப்பட்டவர்களை எட்டி வைக்கிறார்கள், தீண்டாமை பாராட்டுகிறார்கள்!

தீண்டாமை என்பது தனிப்பட்ட ஒன்றல்ல, சாதிப் பாகுபாடுகளில் ஒரு பகுதியாக இருக்கிறது! எனவே தீண்டாமையை அகற்ற வேண்டுமென்றால், சாதிப் பாகுபாடுகளை அகற்றியாக வேண்டும்!

இப்பொழுது சாதிப்பாகுபாடுகளில் கடைசித் தரமாக உள்ள தாழ்த்தப்பட்டவர்களை எப்படியோ ஒரு வகையில் அந்த இடத்திலிருந்து கொண்டுவந்து விட்டால், அதற்கு அடுத்து மேலே இருக்கிற சாதிப் பிரிவு தாழ்த்தப்பட்ட சாதியாகிவிடும்! இப்படிப் பார்த்துக்கொண்டே போனால், சமூகத்தில் பிறப்பின் காரணமாகச் சாதிப் பாகுபாடுகள் காப்பாற்றப்படுகிற வரை, உயர்ந்தது-தாழ்ந்தது என்ற வேறுபாடு இருக்கத்தான் செய்யும். ஆக தாழ்த்தப்பட்டவர்கள், தீண்டப்படாதவர்கள் என்ற பாகுபாடு நீங்கவேண்டுமானால், சாதி வேற்றுமைகள் அடியோடு அகற்றப்பட்டு, ஒன்றே குலம் என்ற தத்துவத்துக்கு ஆக்கம் கிடைக்க வேண்டும்! அதுவரை புண்ணிய தலங்களில் அடிதடியும் இரத்தாபிஷேகமும், கிராமப் புறங்களில் கலவரங்களும் கண்ணீரபிஷேகமும் இருக்கும் நிலை நீடிக்கும்!

மன்றம்

ஞாயிறு 22—12—57 சென்னை

கல்வியின் தரம்

மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில், பட்டதாரிகளின் தரம் மிக மோசமாகிக் கொண்டு வருவதாகவும், உருப்போட்டு பதில் தரும் முறை அதிகமாகக் காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளன.

இத்தகைய கருத்துக்கள் அடிக்கடி பலரால் வெளியிடப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தலைமுறையிலும் இந்த மதிப்பீடு தரப்பட்டுள்ளது. கல்வியின் தரம் குறைந்து வருகிறதென்பது முப்பதாண்டு முன்பும் சொல்லப் பட்டது. அப்பொழுது படித்தவர்கள் பட்டம் பெற்று வெளியேறியதும் அடுத்தத் தலைமுறையைப் பார்த்து அதே கருத்தை வெளியிட்டார்கள். அப்பா காலத்துக் கல்வி முறையைத் தாத்தா கண்டித்தார், மகன் காலத்துக் கல்வி முறையைத் தந்தை கண்டிக்கிறார். இவ்வாறு ஒவ்வொரு தலைமுறையிலும், அதற்கு அடுத்தத் தலைமுறையின் கல்வித் தரத்தைக் குறை கூறி வருகிறார்கள். இந்தக் கருத்துக்களையெல்லாம் தொடர்ந்து சேர்த்துப் பார்த்தால், மாணவர்களின் தரம் வரவரக் குறைந்துகொண்டு போவதாகத் தோன்றும்.

ஆனால் ஒவ்வொரு தலைமுறையும் கூறுகிற குறைபாட்டைப் போல, மத்திய பப்ளிக் சர்வீஸ் கமிஷன் (மத்திய பொது வேலைக் குழு) தந்துள்ள அறிக்கையையும் நாம் தள்ளிவிட முடியாது. இது ஒரு தலைமுறை மற்றொரு தலைமுறையைப் பார்த்துச் சொல்வதல்ல, ஒரு தலைமுறைக்குள்ளேயே ஏற்பட்டுள்ள மாறுபாடுகளைப் பற்றிய மதிப்பீடாகும். குறிப்பிட்ட சில ஆண்டுகளுக்குள்ளேயே-பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்குள்ளாக மாணவர்களின் தரம் விழுந்து வந்துள்ளது.

மாணவர்களின் அறிவுத் தரம் விழுந்துவருகிறது என்பதைப் பார்க்கும் பொழுது, அதனுடன் இணைந்துள்ள மற்றப் பகுதிகளை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மாணவர்களின் தரம் என்று கூறும் பொழுது ஆசிரியர்களின் தரம் எப்படியிருக்கிறது என்பதைப் பார்க்க வேண்டும். இது ஆசிரியர்களைத் தனிப்பட்ட முறையில் குறை கூறுவதாகாது. ஆசிரியர்களின் தரம், ஆசிரியத் தொழிலுக்கு அரசாங்கம் தருகிற தரத்தைப் பொறுத்து இருக்கிறது. முன்பெல்லாம், படித்த பட்டதாரிக்கு ஆசிரியத் தொழில் நல்ல வேலையாகப் பட்டது. சம்பள வகையிலும், சமூகத்தில் தரப்பட்ட மதிப்பு வகையிலும், சிறந்த பட்டதாரிகள் பின்பு பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் ஆசிரியர் தொழிலுக்கு வரும் படியான நிலை இருந்தது! ஆனால் இப்பொழுது படித்தவர்களுக்கு மற்ற வேலைகள் சிறந்தனவாகத் தோன்றுகின்றன. இன்னும் சொல்லப் போனால், ஆசிரியத் தொழிலில் இருப்பவர்களே வேறு வேலைகள் கிடைக்கும் போலிருந்தால் போய்விடத் தயாராயிருக்கின்றனர்!

ஆரம்ப ஆசிரியர்களை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரம்ப ஆசிரியர் என்றதுமே, வாழ்க்கையில் நொந்துபோனப் பரிதாப மிக்க சோக உருவம்தான் நம் கண் முன்னே வருகிறது. மத்திய அரசாங்கத்தில் சில பிரிவுகளிலுள்ள கடைநித்தர சேவகர்களுக்குக் கிடைக்கக் கூடிய சம்பளம் கூட ஆரம்ப ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலை கல்விப் பணியின் மேன்மை, பொது நல நோக்கம், அ பரப்பும் சேவை எனப் பாராட்டினுல் மட்டும் போதா ஆசிரியப் பதவிக்குத் தரப்படுகிற பொறுப்புக்கும், அ பொறுப்பை ஏற்க முன் வருகிற சம்பளத்துக்கும் ஏற் தாழ்வு வேறெந்தத் தொழிலும் காணுத அளவு அதிகம் இருக்கிறது.

ஆசிரியர் தொழிலின் வாழ்க்கைத் தரம் சரியாகலாத காரணத்தால், நல்ல படிப்பாளிகளும் சிறந்த " ரியர்களும்" வேறு வேலைகளைத் தேடிச் சென்று விடு றனர். மாணவர்களின் தரம் குறைந்துள்ளது என் கூறும் பொழுது, அந்த மாணவர்களைப் பயிற்றுவிக்கி ஆசிரியர்களின் நிலையில் ஏற்பட்டுள்ள "வீழ்ச்சி" ஒரு கிய காரணம் என்பதை மறந்து விடக்கூடாது.

அகில இந்தியத் தொழில் நுட்பக் கல்விக் குழுவி அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் இந்தக் கருத் வலியுறுத்தியுள்ளார்கள் :

"தொழில் நுட்பப் பள்ளிக் கூடங்களுக்கும் க லூரிகளுக்கும், தகுந்த ஆசிரியர்கள் கிடைக்காத குறை பாடு இருக்கிறது. இந்தக் குறைபாட்டை விரைவி கவனித்து நீக்காவிட்டால், தொழில் துறைக் கல் வளர்ச்சியில் பெரிய நெருக்கடி மூண்டு மாணவர் ளின் கல்வித் தரம் குறைந்து விடும். உயர்தரக் கல்லூ ரிகளுக்காக, தகுந்த பயிற்சியுள்ள ஆசிரியர்களை தேடி எடுப்பது கடினமாகயிருக்கிறது. சிறந்த பயி சியுடையவர்கள் மற்ற அரசாங்க வேலைகளுக்கு தனிப்பட்ட அமைப்புகளுக்கும் உயர்ந்த சம்பள காரணமாகச் சென்று விடுகிறார்கள்."

சிறந்த படிப்பாளிகளை இனி ஈர்க்க முடியாத நிலை இப்பொழுதுஅதில்உள்ளசிறந்தவர்களுக்குத் தகுந்தவா ஊக்கந்தராத வகையில் கல்வித் துறை இருக்கிறது. ரியத் தொழிலில் ஏற்பட்டுள்ள சரிவு, மாணவர்களின் வித் தரத்தைப் பாதித்துள்ளது.

இவற்றையல்லாமல், பள்ளிக்கூடங்களில் இருக் இட நெருக்கடி, ஒவ்வொரு ஆசிரியருக்கும் அளவுக்கு ம தரப்படுகிற மாணவர்களின் எண்ணிக்கை, அரசாங் தினர் அடிக்கடி செய்கிற கல்வித் திட்ட மாறுதல்கள், அதிகமான அளவு மாணவர்கள் மீது சுமத்தப்படு பாடப் புத்தகங்கள், இவ்வளவும் போதாமல் மூன்றுமொ நான்கு மொழியென வேடிக்கை பார்க்கும் புது ஆரா சிகள்—இவையெல்லாம் ஒன்று சேர்ந்து மாணவர்களி கல்வி யறிவைக் குறைப்பதாக இருக்கின்றன. இந் குறைபாடுகளையெல்லாம் நீக்கினுல்தான், கல்வித் து யின் "தரத்தை" உயர்த்த முடியும்!

மன்றம் வார இதழின் சந்தா விபரம்

உள்நாடு (இலங்கையும் சேர்த்து)

- இரண்டாண்டு ... ரூ. 15·00
- ஓராண்டு ... ரூ. 8·00
- ஆறுமாதம் ... ரூ. 4·00
- தனி இதழ் ... 16 காசு

இலங்கை சந்தாதாரர்களுக்கு வி. பி. பியில் தனிச் செலவு 75 காசு.

வெளிநாடு (மலேயா-பர்மா)

- இரண்டாண்டு ... ரூ. 18·75
- ஓராண்டு ... ரூ. 10·00

(ஓராண்டிற்கு குறைந்த சந்தா இல்லை)

- தனி இதழ் ... 20 காசு

வினா: **திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணையும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றும், இரண்டிற்கும் சண்டை கிடையாது என்றும், இரண்டும் ஒன்றுபடுவதற்கு இடையூறு ஏதும் இல்லை என்றும், இந்த இணைப்பில் அக்கரையுள்ளவர்கள் அதற்காக பாடுபட வேண்டும் என்றும், பெரியார் இராமசாமி அவர்கள் தஞ்சை பொதுக்கூட்டத்தில் கூறியதாகச் செய்தித் தாள்கள் குறிப்பிடுகின்றனவே, அது பற்றி தங்கள் கருத்து என்ன?**

விளக்கம்: வினாவில் குறிப்பிட்டுள்ளவாறு பெரியார் அவர்கள் கூறினார்களா? எந்த சூழ்நிலையில் கூறினார்கள்? எதைச் சொல்லி விட்டுக் கூறினார்கள்? எந்த நோக்கத்தோடு கூறினார்கள்? என்பவைகளை தெளிவாகத் தெரிந்தால்தான், உண்மையை எளிதாகப் புரிந்து கொள்ள நமக்கு ஏது ஏற்படும்.

வினாவில் எழுப்பப்பட்டுள்ள பிரச்சினைப் பற்றி பெரியார் அவர்களின் ஆட்சிவயப்பட்ட ஏடான "விடுதலை" ஏதொன்றும் குறிப்பிடாமல் இருக்க, பிற செய்தித் தாள்கள் செய்தி என்ற அளவில் வெளியிட்டிருப்பதை மட்டும் கொண்டு நாம் எந்த முடிவுக்கும் அவசரப் பட்டு வந்து விடுவதற்கில்லை. மேலும் பெரியார் அவர்கள் லால்குடி போன்ற இடங்களில் அடுத்துப் பேசிய போது, மேற் சுட்டிக் காட்டப்பட்ட செய்தித்தாள் செய்தியை மறுத்திருப்பதோடு, நாம் [illegible] சென்றதற்குப் பிறகு "கண்ணீர்த் துளிகள்" தம்மையும், தம் கொள்கைகளையும் பற்றி செல்வாக்கு பெறுவதைத் தவிர வேறு வழி என்ன அவர்களுக்கு இருக்க முடியும், என்று தாம் கூறியதையும் பேசியுள்ளார். எனவே வினாவில் எழுப்பப்பட்ட பிரச்சினை பெரியார் அவர்களின் கருத்தூக்கி[illegible]ந்து எழும்பியதொன்றல்ல என்றே தெரிய வருகிறது.

என்றாலும், திராவிடக் கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றுபடக் கூடுமோ என்ற ஐயப்பாடு சிலர்க்கும், ஒன்றுபடக் கூடாதா என்ற [illegible] ஒரு சிலர்க்கும் இருந்து வருவதால், அது பற்றி விளக்குவது ஏற்றது என்றே தெரிய வருகிறது.

திராவிடக் கழகத்திற்கும், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் திராவிடத்தைத் தனி நாடாக ஆக்குதல்- சமுதாயச் சீர்திருத்தங்களைச் செய்தல்—மூடப்பழக்க வழக்கங்கள் குருட்டு நம்பிக்கைகள் ஆகியவற்றை நீக்குதல்—சாதிமத வேறுபாடுகளை அகற்றுதல்—பகுத்தறிவு நெறியைப் பரப்புதல் போன்ற சில அடிப்படைக் கொள்கைகளில் வேறுபாடு இல்லை என்றாலும், அமைப்பு முறை—திட்டங்கள்—செயற்படுத்தும் முறை ஆகியவற்றில் இரண்டிற்கும் நிரம்ப வேறுபாடுகள் உண்டு.

தி. மு. கழகம் சனநாயகத்தைப் பின்பற்றி வருவது; தி. கழகம் பெரியாரின் சர்வாதிகாரத்தைப் பின்பற்றுவது. தி. மு. கவின் எல்லாப் பொறுப்புக்களும் பொதுக் குழுவையே சாரும்; தி. கவின் எல்லாப் பொறுப்புக்களும் பெரியாரையே சாரும். தி. மு. க. உறுப்பினர்கள் எல்லோர்க்கும் உரிமையுடைய ஒரு கழகமாக வளர்ந்து வருவது; தி. க. பெரியார் அவர்களுக்கு மட்டுமே உரிமையுடையதாக வளர்ந்து வருவது. தி. மு. க. ஆற்றல் படைத்தோர், அறிவு படைத்தோர், பண்புடையோர் அனைவரையும் கழக உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறது; பெரியார் முட்டாள்கள் மட்டுமே தி. கவில் இருந்தால் போதும் என்கிறார். மூடப் பழக்க வழக்கங்களையும், குருட்டு நம்பிக்கைகளையும் அறிவுரைகள் மூலமும் தேவையான சட்டங்கள் மூலமும் ஆற்ற வேண்டும் என்றும், அதற்காகப் பிள்ளையார் இராமன்-கிருட்டினன் சிலைகளை உடைக்கவோ-படங்களைக் கொளுத்தவோ தேவையில்லை என்றும் தி. மு. கழகம் கருதுகிறது; ஆனால் தி. கழகமோ 'கடவுளின்' சிலைகளை உடைப்பதாலும்—படங்களை எரிப்பதாலும் மூடப் பழக்க வழக்கத்தையும், குருட்டு நம்பிக்கையையும் போக்கி விடலாம் என்று கருதுகிறது. திராவிடத்தைத் தாயகமாகக் கொண்டு வாழ்பவர்களில், தேவையற்ற வைதீகத்தையும் மூடப் பழக்கத்தையும்—குருட்டு நம்பிக்கையையும் கொண்டுள்ள முதலியார்—செட்டியார்—நாய்க்கர்—பிள்ளை—படையாச்சி—மறவர்—அகம்படியார்—நாடார் — தாழ்த்தப்பட்டவர் போன்றவர்களை எப்படிச் சீர்திருத்தி அவர்களை இயக்க உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்ளத் தி. மு. கழகம் கருதுகிறதோ, அப்படியே தான் திராவிடத்தைத் தாயகமாகக் கொண்டு வாழும் பார்ப்பனர்களையும் சீர்திருத்தி உறுப்பினர்களாக ஆக்கிக் கொள்ள விரும்புகிறது; ஆனால் திராவிடக் கழகமோ பார்ப்பனர்களை மட்டும் கொல்லவும், விரட்டவும் வேண்டும் என்று கருதுகிறது.

இவ்வாறு பல்வேறு வகைகளில் வேறுபடும் இரண்டு அமைப்புகளும் ஒன்றுபட வழி ஏற்படுமா என்பது ஐயப்பாடே. ஒன்றுபட முயன்றாலும் யார் யாருக்கு விட்டுக் கொடுப்பது என்ற பிரச்சினை எழும். சனநாயக அடிப்படையில் ஒழுங்காக, முறைப்படி, நீதியையும் நேர்மையையும் கடைப்பிடித்து, கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு மூன்றையும் மேற்கொண்டு வளர்ந்து வரும் தி. மு. கழகம் விட்டுக் கொடுப்பதற்கோ, தன்னை மாற்றிக் கொள்வதற்கோ எதுவுமில்லை. தி. கழகந்தான் தன் கொள்கையையும் — திட்டத்தையும்— செயல் முறையையும் மாற்றிக் கொள்ள வேண்டி நேரிடும். அதற்குத் தி. கழகம் இணங்கி வருமா என்பது ஐயப்பாடே.

திராவிட முன்னேற்றக் கழகத்தார், திராவிடக் கழகத்தை விட்டு வெளியேறிய போது அதனுடைய எந்தெந்த கொள்கைகளுக்கும், திட்டங்களுக்கும் கட்டுப்பட்டிருந்தார்களோ அதே கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் கட்டுமேதான் இப்பொழுது கட்டுப்பட இயலுமேயல்லாமல், அதற்குப் பிறகு தி. கழகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுக்குக் கட்டுப்பட இயலாதவர்கள் என்பதை அறிஞர் அண்ணா அவர்கள் சென்னை இராயப்பேட்டை பொதுக் கூட்டத்தில் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

மேலும் தி. மு. கழகம் தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு மொழிவழி மாநிலங்களாகத் தேவையான வழி பிரிந்து, குறைந்த அளவுத் திட்டத்திலே ஒன்றுபட்ட ஒரு திராவிடக் கூட்டாட்சி நாடாக மலர வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகிறது. ஆனால் பெரியார் அவர்கள் தமிழகம் மட்டும் பிரிந்தால் போதுமானது என்று இப்பொழுதே வலியுறுத்தத் துவங்கி விட்டார்கள். இந்தப் பிரச்சினையிலும் இரண்டு அமைப்புக்களும் நாளுக்குநாள் வேறுபாடு கொள்வதற்கான நிலைமை ஏற்பட்டு வருகிறது.

மேலும் திராவிட முன்னேற்றக் கழகத்தை அடியோடு இழித்துரைத்துப்— பழித்துப் பேசி—வெறுத் தொதுக்கிற போக்கைத் திராவிடக் கழகத்தார்தான் மேற்கொண்டு வருகிறார்களேயொழிய, தி. மு.கழகத்தார் அப்படிப் பட்ட போக்கை மேற்கொள்வதில்லை;போற்றக் கூடியவைகளைப் போற்றுகிறார்கள், வெறுக்கக்கூடியவைகளை ஒதுக்குகிறார்கள்.

திராவிடக் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஒன்றாக இணையக்கூடாது என்பதல்ல நமது நோக்கம்; இரண்டும் ஒன்றாக இணைவதற்கான நிலைமைகள் ஏற்படவில்லை என்றுதான் நாம் கூறுகிறோம்.

—இரா. நெ.

"பெரியாரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—ஒரு குறிப்பிட்ட இடத்துக்கு அழைத்துச் செல்ல வேண்டும் நீங்கள்; அதற்கான வழியைக் காட்டுங்கள்; நான் வழிகாட்டுபவனல்ல; ஆனால் காட்டுகின்ற வழியிலே சிந்தித்துப் பார்த்து பின் பற்றுபவன்."

"எதையும் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றவேண்டும் என்று சிலர் சொல்லுவார்கள் கண்ணை மூடிப் பின்பற்றுபவர்களுமிருக்கிறார்கள். நான் அப்படியல்ல; கண்ணை மூடிக்கொண்டு சென்றால், போக வேண்டிய இடத்துக்குச் செல்லமுடியாது. "கண்ணை மூடிக்கொண்டு தான் பின் செல்லவேண்டும்' என்று கூறி, 'வா, என் பின்னால்' என்றழைத்தால் எப்படிப் போக முடியும்?

"பெரியாரிடத்திலே எனக்கு பக்தி இல்லாதலால் இதைச் சொல்லுவதாக எண்ணவேண்டாம்; கண்ணைத் திறந்து பார்த்தால்தான், 'வேறுபக்கம் திருப்பி விட்டோமா, அதே பாதையில்தான் செல்லுகிறோமா' என்பதைத் தெரிந்துகொள்ள முடியும்."

"கண்ணைமூடிப் பின்பற்றுபவர்களுக்குத்தான் திராவிடர் கழகத்தில் இடம் என்று சொல்லலாம்; நான் திராவிடர் கழகத்தில் இருந்தபோது, அந்த உரிமை எனக்கு இருந்தது. அதை விட்டுவிட்டுத்தான் வந்தேன்."

—சென்னை இராயப்பேட்டைக் கூட்டத்தில் அறிஞர் அண்ணா

"நெசவாளர் நிலை"

(தி. கோவிந்தராசன், திருவாரூர்)

தோன்றுதொட்டு ஓங்கு புகழ் பெற்று, சிறந்துவிளங்கும் தென்னாட்டுத் தொழில்களுள் சிறந்து விளங்குவன ஒன்று-உழவு; மற்றொன்று, நெசவு!

'பாலாடையன்ன நூலாடைகள்' நெய்து, பட்டு-பட்டாடைகள் எல்லாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வளமுடன் வாழ்ந்தனர் பண்டைத் தமிழகத்து நெசவாளர்கள்!

"இரவார் இரப்பார்க்கொன்றீவர் கரவாது
கைசெய்தூண் மாலையவர்."

என்று வள்ளுவர் கைத்தொழிலின் மேன்மையை தெளிவுபடுத்தியுள்ளார்!

'கரவாது கைசெய்தூண் மாலையவர்' என்று போற்றப்பட்ட கைத்தொழிலில் ஒன்றும் கைத்தறியைத் தொழிலாகக் கொண்டுள்ள நெசவாளர்கள் இன்று 'கையேந்தி' நிற்கின்ற நிலையைத்தான் நாட்டிலே நாம் காணுகின்றோம்.

ஐந்தாண்டுகளுக்கு முன் கைத்தறித் துணிகளுக்கு வேண்டிய நூல் கிடைக்காமலும், நெய்யப்பட்ட துணிகள் விற்பனையாகாமலும் தேங்கிக் கிடந்ததால் சொல்லொணாத் துயரத்தில் நெசவாளர்கள் மிக்க வேதனைப்பட்டு பெற்ற குழந்தைகளை விற்றார்கள். மற்றவர்களின் மானங்காத்த அவர்கள் மனைதொறும் மடியேந்தி நின்ற காட்சியை நாம் கண்டோம்—நாடு கண்டது.

நெசவாளர் தம் அடிப்படை நிலையை ஆராய்ந்து ஆவன செய்யாது, அரசாங்கம் கஞ்சித் தொட்டிகள் அமைத்து கால் வயிற்றுக் கஞ்சி ஊற்றிய நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயல்வீரர்களெல்லாம் தங்கள் தோளின்மீது கைத்தறி ஆடைகளை சுமந்து தமிழகமெங்கணும் விற்று, அதன் வருவாயைக் கொண்டு நெசவாளர் தம் வேதனைக்கண்ணீரைத் துடைத்தது திராவிட முன்னேற்றக்கழகம்!

கைத்தறி ஆடைகளை மக்கள் எல்லோரும் வாங்கவேண்டும் என்பதற்காகவும், தேங்கிக் கிடக்கின்ற துணிகளை விற்பனை செய்வதற்காகவும் சர்க்கார் கைத்தறித் துணிகளை வாங்குபவர்களுக்கு ரூபாய் 1க்கு 1½ அணா விதம் தள்ளுபடி செய்து கொடுத்து அதன் மூலம் நெசவுத் தொழிலுக்கு ஊக்கம் காட்டிவந்தது மக்களும் கைத்தறித் துணிகளையே வாங்கத் தலைப்பட்டார்கள்.

இத்திங்கள் (1-12-57) முதல் தேதியிலிருந்து ரூபாய் 1க்கு 1½ அணா விதம் தள்ளுபடி செய்து கொடுத்துவந்ததைக் குறைத்து, ரூபாய் 1க்கு ஒரு அணா (6 புதிய காசுகள்) விதம் தள்ளுபடி செய்துகொடுக்கப் போவதாகவும் குறைக்கப்பட்ட 'அரையணா'வை நெசவாளர் தம்நலனுக்கு செலவிடப்போவதாகவும அதற்காகவே குறைக்கப்பட்டது என்றும் அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

இப்படிக் குறைக்கப்பட்டதை 'நெசவாளர் கூட்டுறவு சங்கங்களெல்லாம்' எதிர்த்து "ஏற்கனவே வேறு துணிகளெல்லாம் விற்பனையாகாது தேங்கிக்கிடக்கின்றன. இப்பொழுது ரூபாய் 1க்கு 1½ அணாவாக தள்ளுபடி செய்து கொடுத்துவந்ததை ஒரு அணா விதம் (6 புதிய காசுகள்) தள்ளுபடி செய்து கொடுத்தால் வாங்குபவர்கள் தொகை குறையும். எனவே பழைய முறையே நீடிக்கவேண்டும்." என்று அரசாங்கத்திற்கு அறிக்கை மூலம் அறிவித்துள்ளார்கள்."

அண்மையில் டெல்லியிலிருந்துவந்த அமைச்சர் திரு. நித்தியானந்தகனுங்கோ அவர்கள் "இன்னும் ஓராண்டுக்குள் கைத்தறித் துணிகளுக்கு விற்பனை விலைக் கழிவு தருவதை அறவே நீக்கிவிடப்போவதாக இருக்கிறோம்.'' என்று அதிர்ச்சிதரும் செய்தியொன்றைக் கூறியிருக்கின்றார்.

ஏழையின் பணத்தைப் பாதுகாப்பாக வைத்திருந்த பணக்காரன் ஒருவன் ஏழையிடம் அந்த ஆயிரம் ரூபாயை முதலில் திருப்பிக்கொடுத்துவிட்டு, பின்னர் சிறிதுநாள் சென்று ஐநூறு ரூபாயை வாங்கிக்கொண்டு எல்லாம் உன் நன்மைக்குத்தான் வாங்கிக்கொண்டேன்!'' என்றானும். பிறகு அந்த மற்றத் தொகையையும் வாங்கிக்கொண்டு உனக்கு வேண்டுவன தருகிறேன்'' என்று கூறி ஆசை காட்டி மோசம் செய்துவிட்டான்.

பணக்காரன் - ஏழையிடம் நடந்து கொண்டதைப்போல் அரசாங்கமும் - நெசவாளர்களிடம் நடந்துகொள்கிறது. ஒன்றரையணாவிலிருந்து ஒரு அணாவாக குறைக்கப்பட்டபோது அதிலிருந்து கிடைக்கக் கூடிய லாபத்தை நெசவாளர் தம் நலனுக்குச் செலவிடத்தான் குறைத்தோம் என்று அரசாங்கம் கூறியது. இப்பொழுது அதையும் அறவே நீக்கிவிட்டீர்களேயானால் கைத்தறித் தொழில் பாதிக்குமே என்று கேட்டால் மேலும் தொழில் பெருகுமேயன்றி பாதிக்காது என்று பதில் தருகிறார் அமைச்சர் கனுங்கோ. வடநாட்டு நெசவுத் தொழில் பெருகும் என்பதைத்தான் அமைச்சர் அவ்விதம் கூறினாரோ என்னவோ தெரியவில்லை.

சாதாரணமாக நூறு ரூபாய்க்கு துணிகள் வாங்குபவர்களிடத்தில், 'கைத்தறி ஆடைகளை வாங்கினால் பத்து ரூபாய் மிச்சமாகும். மேலும் நீடித்து உழைக்கும்' என்று சொன்னால் உடனே கைத்தறித்துணியை வாங்கி உடுத்த முற்படுகிறார்கள்.

இந்நிலையில் கொடுத்துவந்த 'விற்பனை விலைக்கழிவு' சலுகையை அறவே இல்லாது செய்துவிட்டால் நெசவாளர் நிலை மிகமோசமாகிவிடும். கைத்தறிநெசவாளர்களுக்கு கருணை காட்டுவதாகக் கூறுகின்ற சர்க்காருடைய செயலையும் - போக்கையும் நாம் எண்ணிப்பார்க்குமிடத்து வடநாட்டு ஆலைத்தொழில்களை மேலும் வளம்பெறச்செய்துதமிழகத்து கைத்தறித்தொழிலை நசுக்குவதற்காகத்தான் மத்யசர்க்கார் இவ்விதம் செய்துவருகின்றார்கள் என்று எண்ண இடமேற்படுகின்றது. "வடநாட்டு ஆலைத்தொழில் தமிழ்நாட்டு நெசவுத் தொழிலுக்கு போட்டியாக இருக்கின்றவரையில் நெசவாளர்கள் அல்லல் தீராது, ஆனால் என்ன இருந்தால் தீரும்? 'திராவிட நாடு' என்ற எல்லைக்கோடு இருந்தால் தீரும்'' என்று அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை ஆட்சியாளர்களுக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

கோடிக்கணக்கான ரூபாய்கள் செலவுசெய்து வடநாட்டில் பெரியபெரிய திட்டங்களையெல்லாம் போட்டு நிறைவேற்றுகின்ற மத்யசர்க்கார் தோன்றுதொட்டு சிறந்து விளங்குகின்ற தமிழகத்துக் கைத்தறித் தொழிலையாவது புறக்கணிக்காது நெசவாளர் தம் கஷ்டத்தை உணர்ந்து அவர்களின் நிலை உயர ஆவன செய்தல் வேண்டும்.

கைத்தறித் தொழிலை நம்பி பல லட்சக்கணக்கானகுடும்பங்கள் வாழ்கின்றனர்! கைத்தறிக்கு ஒரு நிரந்தரமான பாதுகாப்பும், நிலையான பொருளாதார அமைப்பும் அரசாங்கத்தால் உண்டாக்கப்பட்டாலன்றி, அந்த இலட்சக்கணக்கான மக்கள் சிந்தும் கண்ணீரைத் துடைக்க முடியாது!

கட்சிக்கூட்டங்களில் கதரின் மகத்துவத்தைப் பேசிவிட்டு நடைமுறையில் ஆலை முதலாளிகளுக்குச் சலுகைகள் தந்துவிட்டு, மக்களிடம் வரும்பொழுது கைத்தறி கவனிக்கப்படும் என்று கூறிவிடுவதால் பிரச்சினைக்கு முடிவு காண முடியாது! தனது அடிப்படைக் கொள்கை இதுதான் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டு, கைத்தறிக்கு எதிர்காலம் உண்டென்று தக்கப் பாதுகாப்புத் தந்துவிட்டு, கைத்தறி வேண்டாமென்றால் அந்த லட்சக்கணக்கான குடும்பங்களுக்கு வேறு வகை செய்துவிடவேண்டும். நிலையானகொள்கையில்லாமல் 1½ அணா தள்ளுபடி தருவதும் பின் அதில் அரையணா குறைப்பது என ஊசலாட்டம் காண்பிப்பது நல்லதல்ல!

தங்களுக்கு வேண்டியவற்றை நினைத்து மற்றவர்கள் கடவுளுக்குப் பிரார்த்தனை செலுத்துவதை ஒரு சிறுவன் கவனித்தான். "கடவுளே! எனக்கு நூறு ரூபாய் பணம் வேண்டும்!'' என்று சிறுவன் பிரார்த்தனை செய்ய ஆரம்பித்தான்.

நாள்தோறும் காலை மாலை தவறாமல் அந்தச் சிறுவன் பிரார்த்தனை செய்துகொண்டிருந்தான். இரண்டு வாரங்கள் கடந்தன. சிறுவனுக்கு 100 ரூபாய் வந்து சேரவில்லை. பிரார்த்தனை செய்தால் போதாது, கைப்பட கடிதம் எழுதவேண்டுமென்று நினைத்து, பையன் ஒரு கடிதம் எழுதி, "திருவாளர் கடவுள் அவர்கள், தெய்வலோகம்'' என்று அனுப்பினான்.

தபால் நிலையத்தில் இந்தக் கடிதத்தைப் பார்த்துச் சிரித்துக்கொண்டார்கள். ஒருவர் ஒருவராக வேடிக்கை காட்டி, கடைசியாகத் தபால்இலாகா மந்திரியிடம் போய்ச் சேர்ந்தது. பையனின் கடிதத்தைப் பார்த்த மந்திரி சிரித்துக்கொண்டு, ஐந்து ரூபாய் பணத்தைப் பையன் விலாசத்துக்கு அனுப்பிவைத்தார்.

தான் எழுதிய கடிதத்துக்குப் பதிலாக ஐந்துரூபாய் பணம் கிடைத்தது குறித்துச் சிறுவன் மிகவும் மகிழ்ச்சியடைந்தான். நன்றி தெரிவித்துக் கடவுளுக்கு அவன் ஒரு கடிதம் எழுதினான். "தாங்கள் அனுப்பிய பணம் வந்து சேர்ந்தது, நன்றியுடன் பெற்றுக்கொண்டேன். ஆனால் ஒன்று. மந்திரி மூலமாகப் பணத்தை அனுப்பியதால், வழக்கம்போல் 100 ரூபாயில் 95 ரூபாயை அவர்கள் எடுத்துக்கொண்டு பாக்கி 5 ரூபாயைத்தான் எனக்குத் தந்தார்கள். அடுத்ததடவை நேராக எனக்கு அனுப்பிவிடவும்."

கதை

எதிரிகள்

> இது ருஷிய எழுத்தாளர் ஆண்டன் செகாவ் (1860—1904) அவர்கள் எழுதிய சிறு கதையின் மொழிபெயர்ப்பாகும்.

இரவு ஒன்பது மணி! டாக் கிரிலோவின் வீட்டில் அவ டய ஆறு வயதுப் பையன் ண்டனி இறந்து விட்டான். லோவ் அந்த வட்டத்தின் த்துவ அதிகாரி என்ற திலும், குழிப்புண் நோய் வருடைய மகனை மாய்த்து டது. இறந்து விட்ட யன் அருகே டாக்டருடைய னவி அழக்கூடச் சக்தியற்று ந்து கிடந்தாள்.

நோய் கடுமையானது என்ற ணத்தால் வேலைக்காரர்கள் வெளியில் அனுப்பப்பட்டு டார்கள். சட்டைக் கைகள் க்கப்பட்டு, நெற்றியில் ர்ந்த வியர்வை துடைக்கப் மல், கிரிலோவ் மரத்துப் ாய் உட்கார்ந்திருந்தார், பொழுது வெளியில் மணி த்தது.

நீண்ட ஹாலில், தலையில் ியைப் போட்டு வயதான, ரமான ஒருவர் வருவது டம் தெரிந்தது. மங்கிய ிச்சத்திலும் அவர் முகம் றியிருப்பது தெரிந்தது.

டாக்டர் இருக்கிறாரா?''

இருக்கிறேன். என்ன ண்டும்?'' என்று கிரிலோவ் ந்து வெளியே வந்தார்.

நல்ல வேளை! இருக்கமாட் ளோ எனப் பயந்து வந் ன்! பக்கத்து கிராமத்தில் க்கிறேன். என் பெயர் பாகின். இதற்குமுன் கூட சந்தித்திருக்கிறோம்! உட வாருங்கள், என் மனைவி காய்ச்சலில் கிடக்கிறாள். டி தயாராக இருக்கிறது'' பாகின் மூச்சு விடாமல் னர். குரலில் நடுக்கமும், ம், துடிதுடிப்பும் இருந் . பெரிய பயங்கரத்திலி தப்பி வந்த குழந்தை தி சொல்வதைப போலி ந்து. டாக்டர் பேசாமலிருந்

டாக்டர்! மாலை நன்றாகத் இருந்தாள். எனது நண் அலெக்சாந்தர் செமானோ வந்தார். அப்பொழுது கள் அவரை வரவேற்று, ர்ந்து பேசிக் கொண்டி தாம், திடீரென்று, என் வி மார்பில் கை வைத்து, தாங்காமல் சத்தம் டு, கீழே விழுந்து விட் ! அவளைப் படுக்கையில் டு ஓடோடியும் வந்தேன். துப் பயமாக இருக்கிறது. ம் வாருங்கள்! டாக்டர்!'' த குறையாக அபோகின் தார்.

ல்லை, இப்பொழுது என் ளம்ப முடியாது! ஸந்து நிமிடங்களுக்கு முன்புதான் என் மகன் இறந்துவிட்டான்!'' என்று கிரிலோவ் எழுந்தார்.

''ஐயோ! அப்படியா? நான் கொஞ்சங் கூட எதிர் பார்க்க வில்லை! எல்லாம் என் கஷ்ட காலம், நான் கொஞ்சங்கூட எதிர் பார்க்கவில்லை! யார்தான் எதிர் பார்க்க முடியும்.''

தலையில் கைவைத்து அபோகின் உட்கார்ந்திருந்தார். திடீரென்று எழுந்து, கிரிலோவ் அருகில் வந்து, ''டாக்டர்! உங்களுக்கு ஏற்பட்டுள்ள நஷ்டமும சோகமும் பெரிதுதான்! இந்தச் சமயத்தில் உங்களைக் கூப்பிட நினைப்பது குற்றம் தான்! ஆனால் என் செய்வது? இந்தப் பக்கத்தில் வேறு டாக்டரே கிடையாது! நான் வேறு யாரிடம் போக முடியும்? கொஞ்சம் தயை செய்து வாருங்கள்! எனக்காக நான் கூப்பிடவில்லை! உங்கள் துயரத்தைப் பார்க்கும் பொழுது என் உயிருக்கு ஆபத்து என்றால்கூடப் பேசாமல் போய் விடுவேன்! அவசியம் நீங்கள் வரவேண்டும்!'' என்று தொடர்பின்றி புலம்பினார்.

டாக்டர் பேசாமல் தன் அறைக்குச் சென்றார், அபோகினும பின்னால் போய் உட்கார்ந்தார். மேஜைமேலிருந்த விளக்கைத் தூண்டிவிட்டு கிரிலோவ் உட்கார்ந்தார், பக்கத்திலிருந்த புத்தகத்தை ஒழுங்காக ஓரத்தில் வைத்தார். அறைச் சுவரையும், சுற்றிலுமிருந்த புத்தகங்களையும் சாமான்களையும் அவர் கண்கள் பார்த்தன. ஆனால் அவர் பார்வையில் எந்த உணர்ச்சியும் இல்லை, மனதிலும் எத்தகைய எண்ணமும் இல்லை! எதிரில் உட்கார்ந்திருபபவரைக்கூட அவர் மறந்துவிட்டார். ஏதோ ஒரு புது வீட்டில், புதிய சூழ்நிலையில் இருப்பதைப் போல டாக்டருக்கு இருந்தது. சிறிது நேரம் உட்கார்ந்திருந்து விட்டு, டாக்டர் எழுந்து, இருட்டில் நடப்பவனைப் போலத் தட்டுத் தடுமாறி கதவைத் தேடி, அந்த அறையை விட்டு வெளியேறி, மீண்டும் மகன் இருந்த அறைக்குள் சென்றார்.

முக்காலிமேல் மெழுகுவர்த்தி இருந்தது. அதைச் சுற்றி மருந்துப்பெட்டிகள் இருந்தன. அடுத்துச் சற்று உயரத்திலிருந்த பெரிய விளக்கு அறையை ஒளிசெய்தது. பலகணிக்கு அருகில் இருந்த படுக்கையில் பையன் உறக்கத்திலிருப்பதைப் போலக்கிடந்தான். படுக்கையின் மேல் முகத்தை வைத்துப் புதைத்த வண்ணம் தாய் மண்டியிட்டிருந்தாள். சிறிது கூட அவள் உடலில் அசைவைக் காணோம்! மகனைப்போல தாயும் இருந்தாள். சுற்றிலுங் கூட, சிதறிக்கிடந்த துணிகள், உருண்டு கிடந்த சாமான்கள், மூலையில் தேங்கிக் கிடந்த தண்ணீர்—அங்கிருந்த காற்றுக் கூட அப்படியே அசைவற்று இருந்தது. எல்லாம் ஒருவகை ஆழ்ந்த, அமைதியான, சோகத்தில் ஆழ்ந்திருந்தன!

மனைவியின் பின்னால் போய் டாக்டர் நின்று, மகனின் முகத்தைப் பார்த்தபடி இருந்தார். அவருடைய கன்னத்தில் வழிந்திருந்த கண்ணீர்ச் சொட்டுகள் வெளிச்சத்தில் பிரகாசித்தன.

அந்த அறைக்குள் அந்தச் சமயத்தில் யாராவது வந்திருந்தால், இறந்து போன செய்தியை உணர்ந்திருக்க முடியாது. தந்தையோ, தாயோ அழுது புலம்பவில்லை. அசையாமல் தாய் உட்கார்ந்திருப்பதையும், அமைதியுடன் டாக்டர் நிற்பதையும் பார்த்தால், ஆழ்ந்து கிடக்கும் சோகத்தை மறைத்து, ஒரு வகையான கவர்ச்சி இருப்பதைக் காணமுடியும். இவ்வளவுக்கும் டாக்டர் கிரிலோவுக்கு வயது நாற்பத்தைந்து இருக்கும். அவருடைய மனைவிக்கு அதைவிட இரண்டொரு ஆண்டுகள் வயது குறைந்திருக்கலாம். இனிமேல் அவர்களுக்கு ஒரு மகன் கிடைக்கும் என்று கூற முடியாது! இறந்து போன பையன் அவர்களுடைய ஒரே மகன் என்பது மட்டுமல்ல, அவர்களுடைய கடைசி மகன் கூட!

அங்கே நின்று கொண்டிருக்க முடியாமல், டாக்டர் சமையலறைக்குச் சென்றார். அங்கிருந்து மற்றொரு அறைக்குள் நுழைந்து, ஹாலுக்குள் வந்தார். அங்கு வெளுத்த முகம் அவருக்குமுன் எதிரே நின்றது.

''கடைசியாக, போகலாமா!'' என்று அபோகின் ஆவலுடன் கேட்டார்.

டாக்டருக்கு இப்பொழுது தான் வந்திருப்பவரைப் பற்றி ஞாபகம் வந்தது. ''வர முடியாதென்று முன்பே சொன்னேனே! எப்படி வரமுடியும்...'

''டாக்டர்! நீங்கள் சொல்வது சரிதான்! ஆனால் நான் என்ன செய்யலாம் சொல்லுங்கள்! அங்கே, என் மனைவி செத்துக் கொண்டிருக்கிறாள், இதற்குள் என்ன ஆகியிருக்கும் என்று சொல்ல முடியாது. அவளுடைய முகத்தை நேரில் பார்த்தால், அவள் பட்ட வேதனையைப் பார்த்தால் உங்களுக்கே இரக்கம் உண்டாகும்! எப்படியாவது நீங்கள் வர வேண்டும், கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்!''

''இல்லை, வீணாகத் தொந்தரவுச் செய்யாதீர்கள்! நான் வெளியில் கிளம்ப முடியாது!''

''டாக்டர்! அப்படிச் சொல்லாதீர்கள்! எனக்காக நான் மன்றாடவில்லை! சாதாரணமாக பல்வலி, தலைவலி என்றால் இப்படி நான் கூப்பிடமாட்டேன், ஒரு உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறது! அந்த உயிர் உங்கள் கையிலிருக்கிறது! டாக்டர்! மனிதாபிமானம் என்று இரக்கங் காட்டியாவது வரவேண்டும்.''

''மனிதாபிமானம்! இரக்கம்!'' டாக்டர் தனக்குத்தானே கூறிக்கொண்டார். ''அதே மனிதாபிமானத்தின்படி தான் நானும் கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சமயத்தில் நான் எப்படிக் கிளம்ப முடியும்? இரக்கம் என் மீது யாரும் இரக்கம் காட்ட மாட்டேன் என்கிறார்களே! உள்ளே என் மகன் இறந்து கிடக்கிறான், என் மனைவிக்கு ஆறுதல் கூறக்கூடப் பக்கத்தில் வேறு யாருமில்லை! இல்லை! என்னைத் துன்புறுத்தாதீர்கள்! எங்களுடைய சட்டதிட்டங்களில் 13 வது விதிப்படி யாராவது நோய் என்று வந்தால், நான் போய் உடனே பார்க்கவேண்டும் என்று இருக்கிறது. அந்த விதியைக் காட்டி, நீங்கள் கூட என்னைக் கட்டாயப்படுத்தலாம். ஆனால் இப்பொழுதுள்ள நிலையில், நான வந்தால் கூடப் பலனில்லை. எதையும் என்னால் செய்ய முடியாது! என்னால் சரியாகப் பேசக்கூட முடியவில்லை. மன்னிக்க வேண்டும்!''

அபோகின் விடுவதாயில்லை. ''டாக்டர்! இப்படி நீங்கள் சொல்லக்கூடாது. உங்கள் சட்டதிட்டங்களில் இருக்கிற 13 வது விதியைப் பற்றி நான் கவலைப் படவில்லை. உங்களால் வரமுடியாது என்றால் என்னால் கட்டாயப் படுத்த முடியாது. நீங்கள் வருவதென்றால் வாருங்கள்; வர முடியாதென்றால் நான் போகிறேன்! கடைசியாக ஒன்றை மட்டும் நான் சொல்லிக் கொள்வேன். உங்களுடைய மகன் இறந்துவிட்டான். என் மனைவி அங்கே இறந்து கொண்டிருக்கிறாள்! மற்றவர்களை விட உங்களால் இதைப் பற்றி நன்றாக உணர முடியும்! உங்கள் இஷ்டத்துக்கு விட்டு விடுகிறேன்!''

அபோகின் குரல் தழதழத்தது. சொற்களை விட, அவர்

3861

குரலில் இருந்த நடுக்கம் அதிகச் சக்தி வாய்ந்ததாயிருந்தது! அதிலும் பேசி முடிந்து அமைதியாக இருந்தது, இன்னும் அதிகச் சக்தியைத் தந்தது! மிக அதிகமான மகிழ்ச்சியாயிருந்தாலும் துன்பமாயிருந்தாலும், அமைதிதான் அதை முழுமையும் வெளிப் படுத்துகிறது!

டாக்டர் கிரிலோவ் பேசாமல் நின்ருர். அபோகின் மீண்டும் ஏதேதோ தட்டுத் தடுமாறிச் சொன்ஞர்.

"இங்கிருந்து எவ்வளவு தூரம்?"

"பதின்மூன்று, பதினுன்கு கல் தொலைவுதான் இருக்கும். என் குதிரைகள் வேகமாகப் போகும். போய் ஒரு மணி நேரத்திற்குள் உடனே திரும்பி வந்து விடலாம்! டாக்டர் ஒரு மணி நேரத்துக்குள் இரும்பக் கொண்டு வந்து சேர்த்து விடுகிறேன்."

முதலில் அபோகின் சுட்டிக் காட்டிய மனிதாபிமானம், இரக்கம் இவைகளை விடக் கடைசியாக அவர் சொன்னது டாக்டருக்குச் சரியாகப் பட்டது.

"சரி, போகலாம்!"

டாக்டர் அறைக்குள் போய் கோட்டைப் போட்டுக்கொண்டு வந்தார். "டாக்டர்! உங்களுக்கு என்ன கைம்மாறு செய்தாலும் தகும்! பெருந்தன்மை, இரக்க உள்ளம் என்ருல் இதுதான்! டேய்! இந்தப் பெட்டியை வண்டியில் வை! வேகமாகப் போக வேண்டும்!" என்று அபோகின் மகிழ்ச்சி தாளாமல் முன்னல் டாக்டர் பெட்டியுடன் சென்று, வண்டிக்காரனுக்கு உத்தரவிட்டார்.

குதிரைகள் வேகமாகக் கிளம்பின. டாக்டர் வீட்டை விட்டுப் புறப்பட்டு, ஆஸ்பத்திரியையும், உயர்ந்த கட்டிடங்களையும் தாண்டி, வண்டி இருள் சூழ்ந்த பாதையில் சென்றது. வண்டியினுள் டாக்டர் கிரிலோவும், அபோகினும் ஒன்றும் பேசாமல் அமர்ந்திருந்தனர். மரங்கள், புதர்கள், கடந்து சென்றன.

அபோகின் பெருமூச்செறிந்து கொண்டார். "மிக வேதனையான கட்டம்! இழக்கப் போகும் நிலையில் நாம் எவ்வளவு அதை நேசிக்கிருேம் என்பது தெரிய வருகிறது!"

வண்டி ஒரு வாய்க்காலில் இறங்கிக் கொண்டிருந்தது. தண்ணீரைச் சக்கரங்கள் தள்ளும சத்தம் கேட்டது. கிரிலோவ் திடுக்கிட்டுப் பார்த்து "என்ஞல் இப்பொழுது வர முடியாது. சிறிது நேரங் கழித்து வருகிறேன். வீட்டுக்கு யாரையாவது அனுப்ப வேண்டும். அங்கு என் மனைவி தனியாக இருப்பாள்" என்று சொன்ஞர்.

அபோகின் பதில் சொல்லவில்லை. வண்டி தண்ணீரை விட்டு வெளியேறி, மணலில் "கற கற"வென்று உராய்ந்து, பின் கல்லில் தட்டி, பாதையில் ஏறி மீண்டும் வேகமாகப் போகத் தொடங்கியது. அலுத்துக் கொண்டு, வேதனையுடன், சாய்ந்து கிரிலோவ் உட்கார்ந்தார். வெளியில் இருண்டவானில் நட்சத்திரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. வளைந்து போகும் ஆற்றங்கரையும், அதைபடுத்திருக்கும் செடி கொடிகள் வரிசைகளும் தெரிந்தன. பாதைக்கு மறு பக்கத்தில் குன்றுகளும் புதர்களும், இருந்தன. பனியிலும் இருட்டிலும் எல்லாம் நிழல் போலக் கடந்து போயின. இடையிடையே தூரத்திலிருந்து விளக்கு வெளிச்சங்கள் தோன்றி மறைந்துவிடும்.

இயற்கை முழுவதும் துன்பத்திலும் நோயிலும் அடங்கிக் கிடப்பது போலிருந்தது. ஒழுக்கந் தவறிய பெண் தனிமையாக இருட்டறையில் படுத்திருக்கும் பொழுது இறந்த காலத்தைப் பற்றி நினைக்க விரும்பாமல் புரண்டு கிடப்பதைப்போல, கடந்து போன இளவேனிலையும் கோடையையும் பற்றி நினைக்க விரும்பாமல் பூமி அந்த குளிரில் முடங்கிக் கிடந்தது. திரும்பிப் பார்க்கும் திக்கிலெல்லாம் கரிய இருள் தான் கண்ணுக்குப் பட்டது.

தனது மாளிகையின் அருகே வரவர அபோகினின் பரபரப்பு அதிகமானது. வண்டியோட்டுபவனின் மேலாக வழியைப் பார்த்தபடி அவர் இருந்தார். கடைசியாக வண்டி ஒரு மாளிகையின் முன் நின்றது. அபோகின் கீழே இறங்கி, வெளிச்சம் தெரிந்த மாடி அறையைப் பார்த்துப் பெருமூச்செறிந்தார்.

"ஏதாவது நேர்ந்து விட்டால். என்னல் தாங்க முடியாது!" என்று அபோகின் கூறிக்கொண்டு, டாக்டரை அழைத்துச் சென்ருர். மாளிகை மிக அமைதியாக இருந்தது. "சத்தம் எதுவுமில்லை, ஆக எல்லாம் நன்ருக இருக்க வேண்டும்" என அவர் தன்னைத் தானே தேற்றிக்கொண்டார்.

மாளிகையினுள் இருவரும் வந்தார்கள். உள்ளே பிரகாசமான விளக்குகள் ஒளி செய்தன; சத்தம் எதுவுமில்லை. நல்ல வெளிச்சத்தில் ஒருவரையொருவர் சரியாகப் பார்த்துக் கொள்ள முடிந்தது. டாக்டர் கிரிலோவ் உயரமாக, சற்றுத் தாழ்ந்த தோளுடன் இருந்தார். அவருடைய ஆடைகள் சரியாக இல்லை. தடித்த முகமும் நீண்ட மூக்கும், பற்றற்ற பார்வையும்—ஒரு வகையான கடுமையைக் காட்டின. தலைமயிர் பரந்து, சிறு நரையுடன் இருந்தது. அவரைப் பார்க்கும் பொழுது அவருக்கு ஒருமனைவியிருக்கிருள், இறந்த மகன் வீட்டில் கிடக்கிருன் என்று சொல்ல முடியாது. ஆனல் அபோகினைப் பார்த்தால், முற்றிலும் மாறுபட்டு இருந்தது. நல்ல தோற்றத்துடன், உடல் கட்டுடன், ஒழுங்கான ஆடைகளுடன் காணப்பட்டார். செல்வாக்கான குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பது தெரிந்தது. கோட்டைக் கழற்றி விட்டு, அபோகின் சுற்றிலும் பார்த்துக் கொண்டார்.

"யாரையுங் காணும், சத்தம் எதுவுமில்லை! ஒன்றும் ஆபத்து நேர்ந்திருக்காது!" என்று அபோகின் சமாதானம் செய்து கொண்டு. டாக்டரை அழைத்துப்போய் பக்கத்தில் இருந்த அலங்காரமான அறையில், ஒரு சோபாவில் அமரச் செய்து, "இருங்கள்! நான் போய் டாக்டர் வந்திருப்பதைச் சொல்லி வருகிறேன்!" என்று வெளியேறினர்!

பெரிய மனிதர்கள் வீட்டிலிருக்கக் கூடிய வசதியான அறை! இந்த நேரத்தில், முன்பின் தெரியாத ஒரு வீட்டில் தான் இருப்பதைப் பற்றி டாக்டர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அவர் மருந்துக்கறைகள் படிந்திருக்கும் தன் கையை பார்த்தபடி உட்கார்ந்திருந்தார். ஒரு அழகான மணி விளக்கு, பெரிய கடிகாரம், பஞ்சு அடைக்கப் பட்ட ஒரு ஒநாய் இவைகள் இருப்பதை அவர் பார்த்தார்.

அமைதி நிலவியது. திடீரென்று அந்த மாளிகையின் ஒரு மூலை அறையில் "ஆ!" என்ற கூச்சல் கேட்டது, ஏதோ கதவு திறந்து மூடும் சத்தம் வந்தது. பிறகு, மீண்டும் அமைதி தொடர்ந்தது. தன் கையைப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த கிரிலோவ், பார்வையை உயர்த்தி, அறையின் திறந்த கதவைப் பார்த்தார்.

கதவருகே அபோகின் நின்றுக் கொண்டிருந்தார். அவருடைய தோற்றமே மாறியிருந்தது. அந்த அறையை விட்டு வெளியேறிய பொழுது இருந்த பெரியதன்மை, செல்வாக்கான பார்வை எல்லாம் மறைந்து விட்டன. அவருடைய முகம் சுருங்கி, உதடுகள் துடிதுடித்தன. கண்களில் வேதனை படர்ந்திருந்தது.

உள்ளே தட்டுத் தடுமாறி வந்து, கையை ஆட்டி, "என்னை ஏமாற்றி விட்டாள்! ஓடிவிட்டாள்! துரோகம்! நோய் வந்ததாகப் பாசாங்கு செய்து டாக்டரை அழைத்துவர என்னை அனுப்பி விட்டு, வந்திருந்த அலெக்சாந்தர் செமனேவிச்சுடன் ஓடிவிட்டாள்!" என்று கூச்சலிட்டார்.

"துரோகி! எவ்வளவு நாளாக இந்தச் சதித் திட்டம்? ஐயோ! நான் என்ன கெடுதல் செய்தேன், எனக்கு ஏன் இந்தத் துன்பம் வரவேண்டும்?"

அபோகின் நிற்க முடியாமல் அங்குமிங்கும் நடமாடினுர், உறுமினர், அவர் கண்களிலிருந்து கண்ணீர் வடிந்தது, பெருமூச்செறிந்து வெளியே பார்த்தார்.

டாக்டருக்கு ஒன்றும் புரியவில்லை, சிறிது நேரம் அபோகினைப் பார்த்தபடி இருந்தார்; பின் எழுந்து அருகில் வந்து, "நோயாளி எங்கே இருக்கிருர்கள்!" என்று கேட்டார்.

அபோகின் வெறித்துப் பார்த்தார். "நோயாளி! நோயாளி! அவள் நோயாளியல்ல, துரோகி, வஞ்சகி, காதலி! இதைவிட மோசம் வேறு என்ன இருக்கமுடியும்? என்னை டாக்டரிடம் அனுப்பி விட்டு, அந்தத் தருதலையுடன் ஓடிவிட்டாள்! அவள் செத்துப் போயிருந்தால் கூட நான் கவலைப்பட்டிருக்கமாட்டேன்!"

டாக்டர் கண்ணை விழித்துப் பார்த்தார். அவர் முகத்தில் சோர்வு தட்டியது. "எனக்கு ஒன்றும் புரியவில்லை! வீட்டில் என் ஒரே மகன் இறந்து கிடக்கிருன், மனைவி வேதனை தாங்காது தனிமையில் உட்கார்ந்திருக்கிருள்... மூன்று இரவுகள் கண் விழித்திருக்கிறேன்... கட்டாயப் படுத்தி அழைத்து வந்துவிட்டு, இங்கு ஏதோ கூத்து நடத்துகிறீரே! எனக்கு ஒன்றும் புரியவில்லை!"

அபோகின் தன் கையிலிருந்த காகிதத்தைக் கசக்கிக் கீழே போட்டு காலால் துவைத்தார். "எனக்கும் ஒன்றும் புரியவில்லை! ஒன்றும் தெரியவில்லை! இதுவரைச் சாதாரணமாக வருகிற அலெக்சாந்தர் இன்றைக்குக் குதிரை வண்டியில் வந்ததைக் கூடநான் கவனிக்கவில்லை! நான் ஒரு முட்டாள்!"

டாக்டருக்கு எல்லாம் நாடகத்தில் ஒத்திகை பார்க்கப் படுவதுபோலிருந்தது. "இதெல்லாம் என்ன? எனக்கு ஒன்றும் விளங்கவில்லை! ஏன் இப்படிஎன்னை இங்கு கொண்டு வந்து வேடிக்கை பார்க்கிருர்கள்." தன்னை அந்த பிரமுகர் அவமானப் படுத்துவதாகவே அவருக்குப் பட்டது. அதற்கு மேல் பேசமுடியாமல், டாக்டர் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்தார்.

அபோகின் தன்போக்கில் புலம்பினர். "ஆக நீ என்னைக் காதலிக்கவில்லை!—சரி அப்படியில்லையென்ருல், முதலிலேயே சொல்லியிருக்கலாமே! இவ்வளவு காலமும் ஏன் இந்தப் பாசாங்கு, பொய், மோசம்! என்ன குற்றம் செய்தேன், இந்தத் தண்டனை பெற?" அபோகின் டாக்டர் பக்கம் வந்தார். "டாக்டர்! நான் படும் வேதனையைப் பாருங்கள்! இவளை நான் காதலித்தேன், தெய்வத்தைப்போல அவளைக் கொண்டாடினேன், அவளுடைய அடிமைபோலிருந்தேன்! அவளுக்காக எதையுந் தியாகஞ்செய்யத் தயாராக இருந்தேன்! கடைசியாக என்ன பலன் கிடைத்தது."

அபோகின் கண்ணீர் வடித்தார், அவர் உடல் பதறியது! தன் கதையை—தன் காதல் கதையை — டாக்டரிடம் கூறினர். வரவர டாக்டர் முகத்தில் ஒருவித மாறுதல் வந்தது

..தில் ஒன்றும் புரியாமல் ..சரியத்துடன் கேட்டது ..றி, கோபம் தெரிந்தது. ..வறுப்புடன் கலந்த கோபம், ..போகின் தன் மனைவியின் ..டத்தை எடுத்துவைத்துக் ..காண்டு "இவ்வளவு அழ..ன மலர் முகத்தின்பின், வஞ்..க எண்ணமுள்ள கருநாகம் ..றைந்திருக்குமென யாரால் ..ான கூறமுடியும்!" என உரு..ர். டாக்டர் கிரிலோவ் ..ாவி எழுந்து நின்றார், அவர் ..ண்கள் கோபத்தால் பிரகா..த்தன!

..இதையெல்லாம் என்னிடம் ..ன கூறுகிறாய்! உன் காத..லைப்பற்றி, உன் காதலியைப் ..ற்றி எனக்கென்ன அக்கறை? ..ீட்டிலிருந்து கட்டாயமாக ..அழைத்துவந்து இங்கு கதை ..பேசிக் கொண்டிருக்கிறாயே! ..ன் வீட்டு வேலைக்காரன் ..ன்று என்னை நினைத்துக் ..கொண்டாயா?"

டாக்டர் பேசுவது, இப்..பொழுது அபோகினுக்குப் ..புரியவில்லை!

"ஏன் என்னைக் கூப்பிட்டு ..வந்தாய்? நீ காதலித்தாய், ..வேறு பொழுதுபோக்கு இல்..லாமல் கல்யாணம் செய்து ..கொண்டாய், எக்கேடாவது ..கெட்டுப்போ! உன் காதல் ..கதையை என்னிடம் ஏன் ..சொல்கிறாய்? உன்னைப் போல, ..வேறு வேலையில்லாமல் சோம்..பேறித் தனமாக இருக்கிற ..ன தனவான்கள், சீமான்கள், ..மேட்டிகளிடம் போய் கதை ..சொல் உல்லாசமாகக் கேட்..டார்கள்! என்னைப்போன்ற ..னிதர்களை அமைதியாக இருக்க விடு!"

"என்ன சொல்கிறீர்கள்?" ..ன்று அபோகின் கேட்டார்.

"மற்ற மனிதர்களை உங்கள் ..வேடிக்கை வினோதங்களுக்கு ஆளாக்குவது சரியல்ல என்று ..சொல்கிறேன்! நான் ஒரு டாக்..டர்! நீ டாக்டர்களையும் மற்றும் ஆடம்பரம் தெரியாத அப்பாவிகளையும், நீ அவமானப் படுத்துகிறாய்! கூலியாட்களைப் போல் நடத்துகிறாய்! வேதனைப் படுகிறவனை உன் விளையாட்டுப் பொம்மையாக நினைக்கிறாய்! எவ்வளவு ஆணவம்?" ..டாக்டரின் முகத்தில் கோபம் ..கொப்பளித்தது.

"என்னைப் பார்த்து இவ்வளவு துணிவுடன் யாரும் பேசியதில்லை!" அபோகின உறுமி..னார்.

டாக்டர் கிரிலோவ் அடிபட்ட வேங்கையைப் போல, அதிகக் கோபத்துடன் திரும்பினார். "நான் இருந்த வேதனையில், என்னை அழைத்து வந்து உன் காதல் கதையைச் சொல்ல, உனக்கு எவ்வளவு துணிவு இருக்கவேண்டும்?"

அபோகின் மலைத்துப் போனார். "உங்களுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதா? நான் சோகத்தில் ஆழ்ந்திருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியாதா?"

"சோகம்! சோகம்!" டாக்..டர் முறைத்துப் பார்த்தார்.

"அந்தச் சொல்லை உபயோகிக்காதே! உங்கள் மாளிகைகளுக்கும் அதற்கும் சம்பந்தமில்லை! வரவுக்கு மேல் செலவு செய்யும் சூதாடிகள் கூட, சோகமாகயிருப்பதாக நினைத்துக் கொள்கிறார்கள்."

"டாக்டர்! யாரிடம் பேசுகிறோமென்று தெரியாமல், பேசுகிறீர்கள்! வேறு யாராவது பேசியிருந்தால்,..."

அபோகினும் கோபத்துடன் பேசினார். தன் பையில் கையிட்டு பர்சை எடுத்து, இரண்டு நோட்டுகளை எடுத்து மேஜைமேல் போட்டு, "நீங்கள் வந்ததற்குச் செலுத்த வேண்டிய பீஸ்! எடுத்துக்கொண்டு பேசாமல் போங்கள்!" என்று கூறினார்.

"என்ன ஆணவம்!" என்று அப்படியே அந்த நோட்டுகளைக் கீழே டாக்டர் தள்ளிவிட்டு "அவமானத்துக்கு ஈடாகப் பணத்தைக் கொடுத்தால் போதாது!" என்று சத்தமிட்டார்!

இருவரும் ஒருவரையொருவர் முறைத்துப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். இதற்கு முன் அவர்கள் எண்ணிக் கூடப் பார்த்திருக்க முடியாத அளவுக்குப் பழிச் சொற்களை வீசிக் கொண்டார்கள்! இருவரும் பட்ட வேதனை கோபச் சொற்களாகச் சுடச்சுட வந்து விழுந்தன! காட்டு மிருகங்கள் ஒன்றையொன்று மூர்க்கத்தனமாகத் தாக்கிக் கொள்ளுவது போல, அவர்கள் சொற்களால் தாக்கிக் கொண்டார்கள்!

"தயவு செய்து வண்டியைக் கொண்டுவரச் சொல்லுங்கள்! நான் வீட்டுக்குப் போகவேண்டும்!" என்று டாக்டர் சத்தம் போட்டார்.

அபோகின் மணியடித்தார்: வேலைக்காரர் யாரும் வரவில்லை. மணியைத் தூக்கி எறிந்து கூச்சல் போட்டார்.

வேலைக்காரன் ஒருவன் வந்தான்.

"எங்கு இவ்வளவு நேரம் போயிருந்தாய்?" என்று கையை மடக்கி அவனைக் குத்தச் சென்றார். "போய், வண்டியைக்கொண்டு வா! இரு, இரு! வேலைக்காரப் - பயல்கள் எல்லோரையும் ஒருவன் விடாமல் ஒழித்தால் தான், இந்த வீடு உருப்படும்!"

வண்டி தயாராகும் வரை அபோகினும் டாக்டரும் பேசாமல் இருந்தார்கள். அபோகினுடைய கோபம் சற்று அடங்கியது. மேற்கொண்டு எங்கு போவது, என்ன செய்யலாம் என்பது பற்றி அவர் திட்டமிட்டபடி இருந்தார்.

டாக்டருடைய கோபம் அடங்கவில்லை. வண்டியில் திரும்பிப் போகும் பொழுதும் அவர் கண்களிலிருந்த வெறுப்பு மாறவில்லை! முன்பு இருந்ததை விட அதிகக் கோபம் சேர்ந்திருந்தது! இறந்துபோன மகன் வேதனைப் படும் மனைவி இவர்களைப் பற்றிக் கூட அல்ல, அபோகின், அவரைப் போன்ற மாளிகை வாசிகளைப் பற்றித் தான் அவர் நினைத்தார். கடுமையான-சொல்லப் போனால் அளவுக்கு கொடுரமான வெறுப்பு அவர் உள்ளத்தில் கொழுந்து விட்டெரிந்தது. ஒரேயடியாக அந்த வெறுப்பு அபோகின் போன்ற எல்லோர் மீதும் தாவியது அந்தப் போக்கு நியாயமற்றதாகக் கூட இருந்தது.

காலம் செல்லச் செல்ல கிரிலோவின் சோகம் தணிய..லாம், ஆனால் அன்றைக்கு ஏற்..பட்ட கோபம் கடைசிவரை இருக்கத்தான் செய்தது! 0

"சிகப்பு நாடா" முறை!

—(0)—

காங்கிரசு ஆட்சியில் மாறியதா?

வெள்ளைக்கார ஆட்சிக்காலத்தில், மக்கள் அனுப்புகிற மனுக்கள் தாமதப்பட்டால், இது சிகப்பு நாடா முறை! தாமதப்பட்டுதான் பதில் வரும்" என்று சொல்வார்கள்!

அரசாங்க அலுவலகங்களில் மனுக்களையும் குறிப்புகளையும் வைத்து அனுப்புகிற அட்டையில் சிகப்பு நாடா முடியப்பட்டிருக்கும். அதனால் அரசாங்க முறைக்கு "சிகப்பு நாடா முறை" என்று பெயர்வந்தது. பின் பொதுவாகச் சுற்றி வளைத்துத் தாமதப் படுத்தும் முறைக்கு அந்தப் பெயர் அமைந்து விட்டது!

வெள்ளைக்காரன் காலத்தில், சிகப்பு நாடா முறையைக் கண்டித்துக் காங்கிரசுக்காரர்கள் பலமாகப் பேசியிருக்கிறார்கள்! "மனுப் போட்டால், அதற்குப் பதில் வரத் தாமதமாகிறது. பல கச்சேரிகளில் அது நுழைந்து வெளி வருவதற்குள் பல வாரங்கள் கடந்து விடுகின்றன! ஏழைமக்கள் மிகுந்த நாட்டுக்கு இந்த முறை கூடாது. நாங்கள் ஆட்சிக்கு வந்தால், முதலில் இந்த சிகப்பு நாடாவை வெட்டித் தள்ளுவோம்!" என்று காங்கிரசுத் தலைவர்கள் வீர முழக்கம் செய்தார்கள்.

இப்பொழுது காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக்கு வந்து, பத்து ஆண்டுகளுக்கு மேல் ஆகிறது. அவர்கள் முன் சொல்லியது போல, சிகப்பு நாடா அறுக்கப் பட்டதா என்றால் "இல்லை!" என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது! முன்பு இருந்த சிறிய நாடா, இப்பொழுது பலமான பெரிய நாடாவாக ஆகி விட்டது!

வெள்ளைக்காரன் காலத்தில் போட்ட மனுவுக்குப் பதில் வர வாரங்கள் ஆகும் என்றால், இந்தக் காங்கிரசுக் காலத்தில் மாதக் கணக்கில், ஆண்டுக் கணக்கில் தாமதம் ஏற்படுகிறது!

காங்கிரசாட்சியில் "சிகப்பு நாடா" முறை எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதை இந்தியாவின் முதன் மந்திரி பண்டித நேரு அவர்களே ஒப்புக் கொண்டுள்ளார்.

"ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க நான் முயன்றேன். கூட்டுறவு அமைப்பு அதிகாரி வித விதமான கேள்விகளைத் திரும்பத்திரும்பக் கேட்டபடி இருந்தார். அந்தக் கேள்விகள் பலவற்றுக்கு என்னால் கூடப் பதில்தர முடியவில்லை. கடைசியாக எட்டு மாதங்கள் கழித்து தான் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான அனுமதி கிடைத்தது!" எனப் பண்டித நேரு அவர்கள் ஒரு கூட்டத்தில் தெரிவித்தார்.

பிரதம மந்திரியாக இருப்பவருக்கே ஒரு கூட்டுறவுச் சங்கத்தை ஆரம்பிக்க எட்டு மாதங்கள் பிடித்தது என்றால், கிராமங்களில் இருக்கும் சாதாரண ஏழைகளுக்கு எவ்வளவு மாதங்கள், எவ்வளவு ஆண்டுகள் பிடிக்கும்?

அரசாங்கத்திற்கு ஒரு மனுப் போட்டு அதற்குப் பதில் கிடைக்க வேண்டுமென்றால் மூன்று நான்கு வழிகள் இருக்கின்றன.

(1) மனுவைப் போட்டு விட்டு, அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளைப் போய்ப் "பார்ப்பது"

(2) மந்திரிகளையோ, ஆளுங் கட்சியைச் சேர்ந்த பிரமுகர்களையோச் சந்தித்து, குறிப்பிட்ட இலாகாவைத் தூண்டச் செய்வது.

(3) வக்கீல் மூலம் நோட்டீஸ் அனுப்பியோ, சட்ட நடவடிக்கைகள் எடுத்தோ, அரசாங்கத்தைக் கட்டாயப் படுத்துவது.

(4) வேலை நிறுத்தம் சட்ட மறுப்பு காரியங்களில் ஈடுபட்டு அரசாங்கத்தைப் பணிய வைப்பது.

இந்த நான்கு வழிகளில் ஒன்றைக் கையாண்டால் தான், அரசாங்கத்திடம் ஒரு பதிலை எதிர்பார்க்க முடியும். முதல் இரண்டு வழிகளில் சுலபமாகப் பலர் காரியங்களை முடித்துக் கொள்கின்றனர். பணம் படைத்தவர்களால் மூன்றாவது வழியைக் கையாள முடியும். ஒன்று மில்லாதவர்கள் நான்காவது வழியைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அரசாங்கத்தில் ஏற்படுகிற மந்தமான நிலையும் தாமதமான போக்கும் எந்த அளவுக்கு மக்களைப் பாதிக்கிறது என்பதை மற்றவர்களை விடக் காங்கிரசுக்காரர்கள் நன்றாகத் தெரிந்திருக்க வேண்டும். வெள்ளைக்காரர்கள் காலத்தில் மற்றவர்களை விட அவர்கள் தாம் "சிகப்பு நடா" முறையைப் பற்றி அதிகமாகக் கண்டித்திருக்கிறார்கள். ஆனால் காங்கிரசுக்காரர்கள் ஆட்சிக் காலத்தில் அந்தச் "சிகப்பு நாடா" வர வர வளர்ந்து பெரிய படுதா ஆகும் நிலைக்கு வந்துள்ளது! 0

(இலக்கியம்)

நகைப்போம் வாராய் பாண!

காதலால் பிணைக்கப்பட்டுக் களவொழுக்கம் நடத்திக் கடிமணம் புரிந்து கொண்ட காதலரிருவரும், இல்லறத் தலைவனும் தலைவியுமாய் வளமும் நலமும் பெற்று இனிது வாழ்ந்து வருகின்றனர்.

களவொழுக்கக் காலத்தில் இருந்தபொழுது அவர்களை ஆட்டிப்படைத்த அச்சம், இப்பொழுது அடியோடு அகன்று விட்ட படியால், மாசு மறுவற்ற தங்கு தடையற்ற காதலன்பு ஊற்றெனப் பெருகி கரைபுரண்டு ஓடத் தொடங்குகிறது.

தலைவன் தலைவியினுடைய அழகையும், மடப்பத்தையும் ஓயாமல் போற்றிப் புகழ்ந்து கொண்டேயிருக்கிறான். தலைவனின் பாராட்டு மொழிகளால் மகிழ்ச்சி கொள்ளும் தலைவியும் தலைவனின் அறிவையும் ஆற்றலையும் மிகவாகப் புகழ்ந்து அவனை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறாள்.

திருமணம் நடந்து சில திங்களகள் சென்றபின்னர் தலைவி கருவுறுகிறாள். அவள் கருவுற்றிருக்கும் காலமெல்லாம் தலைவன் அவளை மேலும் மேலும் அன்போடு போற்றிக் காப்பாற்றி வருகிறான். கருவுறும் காலம் முடிந்தவுடன் தலைவி அழகிய ஆண் மகவு ஒன்றை பெற்றெடுக்கிறாள். மகனைப் பெற்றெடுத்ததும் தலைவன் தலைவியரின் இல்லற மகிழ்ச்சி இரட்டிப்பு மடங்கு மிகவாகின்றது. கண்ணினைக் காத்துவரும் இரு இமைகள் போல தலைவனும் தலைவியும் குழந்தைக்கு நோய் நொடி ஏற்படாமல், அதனை அன்போடு பாதுகாத்து வருகிறார்கள்.

குழந்தை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகத் தாய் தந்தையரால் வளர்க்கப்பட்டு வருகிறது. அவன் மெல்ல மெல்ல வளர்ந்து தாய் தந்தை முகம் பார்க்கத் தெரிந்து, கைகால்களை உதறிச் சிரித்து மகிழத் தொடங்கிக் குப்புறக் கவிழக் கற்றுத் தவழ்ந்து செல்லத் தெரிந்து, கைகாரசாய்ந்தாட-கை வீசத் தெரிந்து, மழலை மொழிப்பேசக் கற்றுத் தளர் நடை பயிலத் தொடங்குகிறான்.

கள்ளங் கபடமற்ற உள்ளத்தோடு இல்லற வாழ்வை இனிது நடத்தும் தலைவனின் உள்ளத்தில் ஒழுக்கக் கேடான எண்ணங்களைப் புகுத்துவதற்குப் பாணன் ஒருவன் தலைப்படுகிறான். அவன் தலைவனோடு நட்புறவு கொள்ளும் வாய்பினை ஏற்படுத்திக் கொண்டு, ஊர்க் கோடியிலிருக்கும் பரத்தை ஒருத்தியின் நலன்கள் பற்றியும், அவளோடு கூடிப்பெறக் கூடிய இன்பம் பற்றியும் ஓயாமல் சொல்லிக் கொண்டேயிருக்கிறான். தலைவனும் பாணனின் மொழிகளில் வழுக்கி விழுந்து பரத்தையின் இல்லத்திற்கு அழைத்துச்செல்லப்படுகிறான்.

பரத்தையின் தொடர்பைக் கொண்ட தலைவன், வீட்டையும் வாசலையும், மனைவியையும் மகனையும் மறந்து பரத்தையின் இன்பமே இன்பம் என்ற முறையில் காலங் கடத்தி வருகிறான்.

தலைவன் பரத்தையின் வீட்டிற்குச் சென்றுவிட்டான் என்பதைச் சிலநாட்களில் தெரிந்து கொண்ட தலைவி, அவன் மீது அடங்காத சினங்கொண்டு, ஆத்திரத்தையும் சினத்தையும் வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல்;மகனைப்போற்றி வளர்ப்பதிலே கருத்தையும், காலத்தையும் கடத்தி வருகிறாள். மகன் யாதொருகவலையும் படாமல் வளர்ந்து தெருவில் முக்கால் வண்டி ஓட்டி விளையாடும் பருவம் அடைகிறான்.

தலைவனின் கைப்பொருள் முழுவதும் கரைந்த பிறகு, பரத்தை அவனை வீட்டை விட்டு வெளியேற்றி விடுகிறாள். பரத்தையால் கைவிடப்பட்ட தலைவன் போக்கிடம் அறியாது, மீண்டும் தலைவியிடம் போய்ச் சேர எண்ணுகிறான். தன்னந் தனியே சென்று தலைவியைப் பார்க்க அச்சங் கொண்டு பாணனைத் துணைக்கு அழைத்துக் கொண்டு இல்லம் நோக்கிச் செல்கிறான்.

தலைவனும் பாணனும் வீட்டண்டையில் நெருங்கும்போது, மகன் தெருவில் முக்கால் வண்டி தள்ளி நடை பழகிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறார்கள். கால்களிலே கட்டப்பட்டுள்ள கிண்கிணி ஒலிக்க மகன் தள்ளாடித் தள்ளாடி வண்டியைத் தள்ளுவதைத் தலைவன் நின்று பார்த்து மகிழ்கிறான். மகனை உடன் தூக்கிக் கொண்டு சென்றால் மனைவியின் ஊடல் தணிபக்கூடும் என்று கருதி, தலைவன் மகனின் அருகே சென்று அவனை வாரி அணைத்துக் கட்டிக் கொண்டு முத்த மிட்டு மன மகிழ்கிறான். மகனின் வாயினின்றும் ஒழுகும் சொள்ளை நீர் தந்தையின் மார்பில் பூசப்பட்டிருக்கும் சந்தனத்தை நனைத்து அதனைச் சிதைக்கிறது. தந்தை மகனைத் தோளில் அணைத்துக் கொண்டு மெல்ல வீட்டிற்குள் நுழைகிறான். பாணன் தலைவனின் பின்னால் அச்சத்தோடும், நடுக்கத்தோடும் திருடன் போல் போகிறான்.

வீட்டின் உள் முற்றத்துத் தாழ்வாரத்தில் உட்கார்ந்து தோழியோடு ஏதோ உரையாடல் நடத்திக் கொண்டிருந்த தலைவி, தலைவனையும் பாணனையும் கண்டவுடன், வெடுக்கென்று பெண்மானைப் போல் மருண்டு எழுந்து நின்று திகைப்புறுகிறாள்.

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ

தலைவியின் எட்டாம் பிறைத் திங்கள் போன்ற அழகிய நெற்றியையும், அவளது மணங்கமழும் அழகிய கரிய கூந்தலையும் தடவிக் கொடுக்க வேண்டும் போல் தலைவனுக்குப் படுகிறது. அவற்றைப் புகழ்ந்து கூறுகிறான். அவனது புகழுரை கேட்டுத் தலைவி தலை கவிழ்ந்து நிற்கிறாள். அதோடு அவளைக் கட்டித் தழுவி முயங்க வேண்டும் எனவும் அவன் உள்ளம் விரும்புகிறது. அந்த விருப்பத்தோடு அவன் அவளை நெருங்குகிறான்.

தன்னைத் தலைவன் நெருங்கி வருவதைக் கண்ட தலைவி அப்பால் ஒதுங்கி நின்று "நீ ஏன் என்னிடம் வருகிறாய்? நீ யார்? என்னிடம் வருவதற்கு உனக்கு என்ன தகுதியிருக்கிறது?" என்று கடிந்துரைக்கிறாள்.

"என்னை ஏற்றுக் கொள்ள மாட்டாயா?" என்று வேண்டி நிற்கிறான் தலைவன்.

"உன்னை நான் ஏன் ஏற்றுக் கொள்ள வேண்டும்?"

"நான் உன் அன்பிற்குரிய கணவனல்லவா?"

"நீ என் அன்புக்குரிய கணவனாக ஒரு பொழுது இருந்திருக்கலாம். ஆனால் நான் உன் அன்புக்குரிய மனைவியாக என்றும் இருக்கவில்லையே!"

"நீ தானே என் அன்புக்குரிய மனைவி!"

"நான் உன் மனைவியாக இருக்கலாம், உன் அன்புக்குரியவளாக இல்லையே! உன் அன்புக்குரியவள் பரத்தையர் சேரியிலல்லவா வாழ்கிறாள்!"

"பரத்தையர் சேரியா? நான் அந்தப் பக்கம் சென்றதேயில்லையே!"

"ஐயோ, பாபம்! நீயாக அந்தப் பக்கம் போகவில்லைபோலும்! அவளாக உன்னை அழைத்தாள் போலும்!

"நீ என்னைப் பற்றித் தவறாகக் கருதியிருக்கிறாய்?"

"நீ தவறு செய்திருக்கிறாய்! எனவேதான் அந்தத் தவற்றைத் தவறாகக் கருதியிருக்கிறேன்! அதில் என்ன தப்பு?"

தலைவன் அருகிலிருந்த பாணனைப் பார்த்து "பாண! இதோ பார்! நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கும்போது என்னைத் தலைவி வெறுத்துப் பேசுவதைப் பார்! அவள் வீணே வெறுத்துப் பேசுவதைப் பார்த்தால் எனக்குச் சிரிப்புதான் தோன்றுகிறது! நீயும் வா, இரண்டு பேரும் சேர்ந்துச் சிரிப்போம்! அப்பொழுதாவது அவள் உண்மையை உணர்ந்து கொள்ளட்டும்!" என்று கூறுகிறான். தலைவனும் பாணனும் சிறிது நேரம் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள்.

அப்பொழுது குழந்தை தலைவியை நோக்கித் தாவுகிறான். குழந்தையை அணைக்கத் தலைவி தலைவன் அருகே வருகிறாள். தலைவன் உடனே தலைவியைப் பிடித்துக் கொண்டு, கட்டியணைத்து மகிழ்கிறான். தலைவி வேறுவழியின்றி ஊடல் தவிர்த்து, தலைவனை மன்னித்து ஏற்றுக் கொள்ள இசைகிறாள்! பிறகு இல்லற வாழ்வு இனிது நடை பெறத் தொடங்குகிறது!

* * *

இது நற்றிணை 250 ஆம் செய்யுளின் உள்ளக்கிடக்கையைக் கொண்டு வரையப்பட்ட சொல்லோவியமாகும். இந்தச் செய்யுள் மருதத்திணையைச் சேர்ந்த 'புதல்வனோடுபுகுந்த தலைமகன் ஆற்றுவாய்ப் பாணனுக்குச் சொல்லியது' என்னும் துறையைச் சார்ந்ததாகும். இந்தச் செய்யுளை இயற்றியவர் **மதுரை ஓலைக்கடையத்தார் நல்வெள்ளையார்** என்ற புலவராவார். பெயரால் இவர் ஒரு பெண்பாற்புலவர் என்று ஊகிக்கப் படுகின்றது. இவர் இமய மலையையும், கங்கை ஆற்றையும் பற்றிப் பாடியுள்ளதால் வடநாடு சுற்றி வந்தவர் என்று எண்ண இடமேற்படுகிறது. இவர் மருதத் திணையையும், நெய்தல் திணையையும் நயம் தோன்ற பாடியுள்ளார். இவர் பாடியனவாக நற்றிணையில் இரண்டு பாட்டுக்கள் காணப்படுகின்றன.

(10-ம் பக்கம் பார்க்க)

மேலான பார்வைக்கு

மகாகனம் பொருந்திய டாக்டர் பட்டாபி சீதாராமையா காருவுக்கு பட்டினிகிடந்தான்மங்கலம் சிங்காரம் எழுதிக்கொண்டது,

காங்கிரசு மகா சபையின் தலைவராக இருந்து, காங்கிரசு ஆட்சிக்கு வந்ததும் கவர்னர் வேலை பார்க்கும் பொறுப்பு தங்களுக்குக் கிடைத்தது. இப்பொழுது சற்று ஓய்வாக இருக்கிறீர்கள் என நினைக்கிறேன்! நான் முன்பு சென்னையில் டிராம் கம்பெனியில் வேலை பார்த்து, டிராம் கம்பனி மூடியதும் எங்களையெல்லாம் காமராசர் காப்பாற்றுவார் எனப் பட்டனத்திலேயே எதிர் பார்த்தபடி இருந்து, கையிலிருந்த காசு செலவானதும், பேசாமல் கிராமத்துக்கு வந்து விட்டேன். எனக்கு ஒன்றும் சரியான வேலை கிடைக்கவில்லை. என் குடும்பம் சாப்பாட்டுக்கில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறது! இதைச் சொல்வதால், ஏதோ வேலை தரும்படி கேட்கிறேன் என்று நினைத்துக் கொள்ள வேண்டாம். முன்பு கவர்னராக இருந்த பொழுதாவது இலட்சக் கணக்கில் செலவாகும் எங்களுக்கு ஏதாவது வேலை கொடுத்திருக்கலாம். இப்பொழுது எதுவும் முடியாதென்பது தெரியும்!

நீங்கள் புதிதாக ஒரு செடியின் மகத்துவத்தைக் கண்டு பிடித்திருப்பதாகப் பத்திரிகை படித்தவர்கள் சொல்கிறார்கள். "ரிஷிபோஜன்" என்று அந்தச் செடிக்குப் பெயராம். அதன் வேரைச் சாப்பிட்டால், பன்னிரெண்டு நாளைக்குப் பசியே இருக்காதென்றும் நீங்கள் ஆராய்ச்சி செய்ததாகச் சொல்லுகிறார்கள்! இந்தச் செய்தியைக் கேட்டதும் அப்படியே நான் சந்தோஷப் பட்டேன்! உண்மையில் நீங்கள் ஒரு சித்தராகவோ, அல்லது எங்களையெல்லாம் காப்பாற்ற வந்த கடவுள் அவதாரமாகவோ தான் இருக்க வேண்டும்! சரியான ஆகாரமில்லாமல், எங்களைப் போல பல குடும்பங்கள் பட்டினி தாங்காமல் துடித்தபடி இருக்கின்றன! அந்தச் செடி- நீங்கள் கண்டு பிடித்துள்ள "ரிஷிபோஜன்" செடி எங்கே இருக்கிறது? எப்படி இருக்கும்? எப்படி வளர்க்க வேண்டும்? இவற்றையெல்லாம் நன்ருக விளக்கிச் சொல்லுங்கள்!

பெயரைப் பார்த்தால், ரிஷிபோஜன்—ரிஷிகளுக்கு போஜனம்! இருக்கும், இருக்கும்; அந்தக் காலத்து ரிஷிகள் வருசக் கணக்கில் சாபபாடே இல்லாமல் அகோர தவம் செய்ததாகச் சொல்கிருர்கள். இந்தச் செடியின் வேரைச் சாடபிட்டுதான் அப்படி இருந்திருப்பார்கள்! இவ்வளவு நாளும் நமக்கு இது தெரியாமல் போய் விட்டது!

எங்கே அந்த வேர்? இப்பொழுது அதற்கு என்ன பேர்? எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுங்கள்! எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் தரிசு நிலம் கிடக்கிறது. அதில் முளைக்க வைச்சு, எங்கள் குடும்பத்துப் பசியைப் போக்கி விடுவேன்! பசியைத் தீர்க்கும் என்ருல், வேர் என்ன, அந்தச் செடியையே சாப்பிட நாங்கள் தயாராயிருக்கிறோம்!

உங்களிடம் உண்மையைச் சொல்ல வேண்டுமென்ருல், ஆகாரமில்லாமல் எங்கள் கிராமத்தில் பலர் பக்கத்திலிருக்கும் காட்டுக்குப்போய், செடி கொடிகளைப் பிடுங்கி வேர் கிழங்குகளை எடுத்துச் சாபபிடுகிருர்கள். கத்தாழைச் செடி மருந்துக்குக் கூட இந்தப் பக்கத்தில் ஒன்று இல்லை!

உணவுப் பஞ்சத்தைப் போக்க மற்றவர்களெல்லாம் ஏதேதோ திட்டங்கள் போடுகிருர்கள், அணைகள் கட்டுகிருர்கள், வாய்க்கால் வெட்டுகிருர்கள், வயல்களில் உரம் போடுகிருர்கள்! உங்கள் "ரிஷிபோஜன்" செடி வந்து விட்டால், பிறகு உணவுப் பஞ்சத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்! இன்னுங்கூட ஒரு நல்ல யோசனை சொல்வேன். இந்தச் செடியை இந்தியாவில் ஏராளமாகப் பயிர் செய்து இங்குள்ளவர்களின் பசியைத் தீர்த்து விட்டு, உற்பத்தியாகும் அரிசி கோதுமை முதலியவைகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யலாம்! ஆனல், வெளி நாட்டிலுள்ளவர்களுக்கு நமது "ரிஷிபோஜன்" பற்றித் தெரியாதபடி நாம் ரகசியமாக அதை வைத்துக் கொள்ளவேண்டும்!

முதலாவதாக, மறு தபாலில் ஒரு எட்டு வேர்கள் "சாம்பிளாக" (எங்கள் வீட்டில் ஏழுபேர்களும் ஒரு ஆட்டுக் குட்டியும் இருக்கின்ருேம்.) அனுப்பி வையுங்கள்! இதைச் சாப்பிட்டு பன்னிரண்டு நாளைக்கு பட்டினியில்லாமல் இருக்கமுடியும்! கொஞ்சம் நல்ல வேராகப் பார்த்து அனுப்புங்கள்! சில வேர்களைச் சாப்பிட்டால், பன்னிரண்டு நாட்களுக்கு மட்டுமல்ல பின்பு பட்டினியென்பதே தெரியாதபடி ஆள் போய் விடுவான்! அப்படி போனல் கூட, ஒரு விதத்தில் உணவு நெருக்கடியைச் சுலபத்தில் தீர்த்து விடலாம்! வேரை உடனே அனுப்பி வையுங்கள்! நாங்கள் சாப்பிட்டு வைக்கிருேம்! அந்த வேருக்குப் பக்கத்திலிருக்கிற மண்ணைக் கொடுத்தால் கூட, எங்களுக்கிருக்கிற பட்டினியில் சாப்பிட்டுவிடுவோம்!

உடனே வேர்! வேர்!

இப்படிக்கு
சின்னையன் என்கிற சிங்காரம்
பட்டினிகிடந்தான் மங்கலம்
வறுமைப்பாடி வழி, பஞ்சைக்காடு வட்டம்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

நகுவம் வாராய் பாண பகுவாய்
அரிபெய் கிண்கிணி ஆர்ப்பத் தெருவில்
தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்
பூநாறு செவ்வாய் சிதைத்த சாந்தமொடு
காமர் நெஞ்சம் துரப்ப யான்தன்
முயங்கல் விருப்பொடு குறுகினேம் ஆகப்
பிறைவனப்பு உற்ற மாசறு திருநுதல்
நா(று)இருங் கதுப்பின்எம் காதலி வேறுணர்ந்து
வெரூஉ(ம்)மான் பிணையின் ஒரீஇ
யாரை யோஎன்று இகந்துநின் றதுவே. —[நற்றிணை-25

[பொழிப்புரை: பாணனே! எமது அருகில் வருவாயாக; பிளந்த வாய் வழியாலே உள்ள பரலிடபபட்ட கிண்கிணி ஒலிக்கத் தெருவிலே முக்கால் வண்டியைப் பினபற்றிக் கொண்டு நடை பயிலுகின்ற இனிய மொழியையுடைய மகனை. எம்மார்போடு அணைத்தலும், அவனது செவ்வாம்பல் மலர் போல் தோன்றும் சிவந்த வாய் நீரொழுகுதலாலே சிதைந்த சந்தனப் பூச்சோடு, விருப்பம் வரும் எம் உள்ளம எம்மைச் செலுத்தயாம் எம் காதலியைக் கட்டித் தழுவவேண்டிய விருப்பத்துடனே அருகிலே சென்ருேமாக, அப்படிச் சென்றவுடன் பிறைத் திங்களைப் போன்ற அழகு பொருந்திய மாசற்ற சிறப்புடைய நெற்றியையும், மணம் கமழும் கரிய கூந்தலையுமுடைய அவள் தன் உள்ளத்து வேருகக் கருதிப் பிணை மான் போல் வெருண்டு எம்மை நீக்கி அயலே சென்று நின்று 'நீ என்னருகில் வருவதற்கு யாவனும் தன்மையுடையை' என்று வெறுத்து நின்றதை நினைக்குந் தோறும் நகை தோன்றுதலானே நாம இருவரும் நகைப்போமாக!

நகுகம்-நகைப்போம்; அரி-பரல்; கிண்கிணியில் போடப்படும் கல்; கிண்கிணி-குழந்தையின் காலில் அணியப்படும் அணிகலன்; காமர் நெஞ்சம்-காதல் விருப்பம்; இருங்கதுப்பு-கரிய கூந்தல்.]

தன் அருமை மனைவியி[...] சினத்திற்கு ஆளாகிப் பரத்தை[...] வீட்டிலிருந்து மீளும் தலைவன் தலைவியைத் தனியே நெருங்[...] னைல் அவள் சினங்கொண்[...] தன்னைத் துரத்தியடிப்பா[...] என்று கருதி, அவளது சின[...] தைத் தணிக்க வேண்டி மை[...] தனேடு புகுகிருன் என்று பு[...] வர் எடுத்துக் காட்டும் திற[...] வியந்து பாராட்டுதற் குரியத[...] கும்.

தலைவன் தலைவியர்[...] கிடையே ஏற்படும் ஊடலை[...] தவிர்க்க மைந்தன் எவ்வள[...] அரும் மருந்தாகப் பயன படு[...] ருன என்பது இச் செய்யுளி[...] இனிது விளக்கப்படுகிறது.

தலைவியின் அன்பைப் பெ[...] வும், அவளிடத்தில் தனக்[...] மிக்க அன்பு உண்டு என[...] காட்டிக் கொள்ளவும் அவள[...] கூந்தலையும், நெற்றியையு[...] தலைவன புகழ்ந்துரைத்து[...] பார்க்கிருன். பாணனே[...] சேர்ந்து சிரிப்பதன் மூல[...] அவளது சினத்தையும், ஊட[...] லையும் தவிர்க்கத் தலைவ[...] முயல்கிருன்.

குழந்தையின் காலில் கிண்[...] கிணி அணிதல், குழந்தைக[...] தெருவில் முக்கால் வண்[...] விட்டு நடைபயிலுதல் போன்[...] பழக்கங்கள் குறிப்பிடப்பட்டு[...] ளன.

குழந்தையின் வாய்க்கு[...] செவ்வாம்பல் மலரையும், நெ[...] றிக்கு எட்டாம் பிறைத்திங்[...] ளையும், தலைவி வெருட்சியடை[...] வதற்குப் பெண் மா[...] வெருட்சி அடைவதையும் உ[...] மைகளாகக் காட்டப்பட்டிரு[...] கின்றன.

ண்டித நேருவின் "பதவி தான்!"

—(0)—

★

டியாட்சி முறையில் மக்க ஆதரவைப் பெற்றவர் அதிகாரத்தில் இருப்பார். மக்களால் ஆதரிக்கப்ப கட்சி ஆளுங் கட்சியாக றுகிறது!

டியாட்சியில் ஒரு குறிப் ட பரம்பரை, மக்களால் ரிக்கப்பட்டாலும் ஆதரிக் படாவிட்டாலும், ஆட்சி த்தில் இருக்கிறது! அதி ரங்களை மேற்கொள்ளும் மை மன்னர் பரம்பரைக்கு ருக்கிறது!

இந்தியா "ஒரு உரிமை பற்ற ஜனநாயகக் குடியரசு" விளம்பரப்படுத்தப்படுகி து! ஆனால் முடியாட்சியில் ணக்கூடிய பண்புகள்-ஜனநா கத்துக்கு ஒவ்வாத பழங்கங் ள் இந்தியாவில் இன்று ளர்ந்துவருகின்றன!

ஜனநாயக அரசாங்கத்தில் ங்கு பெற ஒருவன் கிளம்பி ல், அவனுக்கு மக்களின் ஆதரவு தேவை! மக்கள் சம்ம த்தைப் பெற்றால்தான், வன் அரசாங்கத்தின் அருகே செல்ல முடியும்! ஜன நாயகத்தில், மக்களின் சம்ம தத்தைப் பெறுவது தேர்தல் முறையாக இருக்கிறது! தேர் தல் முறையில் பலவிதக் குறை டுகள் இருந்த போதிலும், தற்காலத்தில் அதுதான் ஒரு த அளவு கோலாக இருக்கி து!

காங்கிரசுக் கட்சி தேர்தல் முறையில் வெற்றிகாணும் வித்தையை" நன்றாகக் கற் க்கொண்டிருக்கிறது! இருந்த போதிலும் தேர்தலில் வெற்றிபெற முடியவில்லை யென்றால் காங்கிரசுக் கட்சி டியாட்சி முறைக்குச் சென்று விடுகிறது!

மக்கள் உதறினர், மகான் உதவுகிறார்!

—0—

குடியாட்சியில் ஆளுங்கட்சி மாறலாம், ஆட்சி பீடத்திலிருந்தவர்கள் மக்கள் ஆதரவைப் பெறவில்லையென்றால் கீழே தள்ளப்படலாம்! மீண்டும் மறு தேர்தலில் மக்கள் ஆதரவைப் பெற்று அவர்கள் அதிகாரத்துக்கு வரவேண்டும். ஆனால் தேர்தலில் வெற்றி பெற்றாலும் வெற்றி பெறாவிட்டாலும் பதவிக்கு வந்து விடுகிற காங்கிரசுக்காரர்கள் இருக்கிறார்கள்!

இந்த முறையைக் காங்கிரசுக் கட்சி ஆதரிக்கிறது; ஆட்சி பீடத்திலுள்ள காங்கிரசுக்காரர்கள் அதைச் செய்கிறார்கள்!

நேரு பண்டிதரின் கண்காணிப்பு மட்டும் இருந்தால் போதும், காங்கிரசுத் தலைமை பீடத்தில் அபயம் கிடைத்தாலும் போதும், ஒருவன் என்றென்றைக்கும் மந்திரியாக இருந்துவிட முடிகிறது!

தோற்றாலும் மந்திரி, வெற்றிபெற்றாலும் மந்திரி!

"மார்க்கண்டேயே மந்திரிகள்" - அதாவது எப்பொழுதும் இப்படியே இருக்கச் சிரஞ்சீவித் தன்மை பெற்ற மந்திரிகள் இருக்கிறார்கள்!

ஒரு தடவை "மந்திரி" என்ற ஞானஸ்நானம் ஆகிவிட்டால் போதும், இந்தியாவின் பாதிரியாக (மாதிரி சோஷியலிசத்தின் பாதிரியாக) விளங்குகிற பண்டித நேரு அந்த "மந்திரிகளை" மக்கள் கைவிட்டாலும், மகேசனின் பிரதிநிதியான அவர் கைவிடுவதில்லை. பாவ மன்னிப்புத் தந்து (மக்கள் செய்த "பாவத்தை" மன்னித்து) அவர்களுக்கு ஏதாவது ஒரு பதவி தந்துவிடுகிறார்!

திரு. கே. சந்தானம் மாயவரம் தொகுதியில் தோற்றார், இமாசல பிரதேசத்துக்கு லெப்டினன்ட்-கவர்னராக நியமிக்கப்பட்டார்!

திரு. வி. வி. கிரி தேர்தலில் தோற்றார்; இப்பொழுது தேர்தல் வழக்கில் அவர் வெற்றி பெற்றதாகத் தீர்ப்புத் தரப்பட்டுள்ளது; இருந்தாலும் முதலில் தேர்தல் முடிவு வந்ததும், தோல்வியுற்ற கிரி அவர்கள் மத்தியப் பிரதேசக் கவர்னராக நியமனம் பெற்றார்.

மராட்டிய சமிதியை எதிர்த்து காங்கிரசு சார்பாக திரு பாடாஸ்கர் என்பவர் கடந்த தேர்தலில் தோற்கடிக்கப் பட்டார்; தோற்றுப் போன படாஸ்கரை அழைத்து, பண்டித நேரு அவர்கள் மத்திய பிரதேசத்துக்குக் கவர்னராகப் போட்டார்!

இப்படித் தோற்றுப்போன மந்திரிகளுக்குப் பதவிகளைப் பிடித்து தரும் வேலையில், பாருக்கெல்லாம் ஜனநாயகத்தைப் போதிக்கிற பண்டித நேரு அவர்கள ஈடுபட்டிருக்கிறார்! இப்பொழுது கடைசியாக அரியலூர் அளகேசன் அவர்களுக்கும் "பிரைஸ்" அடித்திருக்கிறது! மக்கள் பார்த்து "நீங்கள் ஆண்டது போதும்!" எனப் பொதுத் தேர்தலில் நிறுத்திவிட்டால் கூட, மகான் நேரு அந்தப் பக்தனை அழைத்து, "இந்தப் பதவி யில் இரும்பிள்ளாய்!" என புதிய பதவியில் அமர்த்தியி ருக்கிறார்! பண்டித நேரு தென் னாட்டில் "வீரப் பிரதாபமா னப்" பேச்சுகளைப் பேசிய பொழுது, அந்தப் பேச்சுகளின் "தரம்" அப்படியே குறையா மல் தமிழில் மொழி பெயர் துத் தந்தவர் கனம் அரியலூர் அளகேசனார்! அந்த மக தான சேவையை மெச்சியோ என்னவோ பண்டித நேரு அவர்கள், கப்பல் கட்டு துறையில் "செப்பனிடும் பகு திக்கு" திரு. அளகேசன் அவர்களைத் தலைவராக நி மித்துள்ளார்!

மக்கள் பார்த்து வீட்டுக் அனுப்புகிறார்கள், மகான் நே பார்த்து "இதோ! பிடி ஒ பதவி!" என வரம் தருகிறார்

தேர்தல் என்பது கேலி கூத்தாகக்கப்படுகிறது! ஜ நாயகம் என்பது வெறு பொழுது போக்காகப்படுகிற வெற்றி பெற்றாலும் பெறாவி டாலும், ஏதாவது ஒரு பத யில் அமர்ந்து விடுவது எ றப் பதவிப் போட்டிதா இன்று நடைபெற்று வரு றது!

விநோபாவே அவர்க "பூதான்" "கிராம்தான் என்று ஆரம்பத்திருப்பதை போல, நமது பாரத ரத் பண்டித நேரு அவர்கள் "ப வி தான்" என்பதை ஆ பித்து நன்றாகச் செய்து வரு றார்! தன்னைச் சுற்றிவரும் கா கிரசுக் கட்சியினர்களுக்குப் ப விகளைத் தானம் செய்கிறா மந்திரிகளாயிருந்து தேர்தலி தோற்ற எவருக்கும் அந் "பதவி தான்" உதவிய கும்!

நாஞ்சில் மாவட்ட தி. மு. க. மாநாடு

நாகர்கோயில் (கிருஷ்ணன்கோவில்) கலைவாணர் பந்தலில்

டிசம்பர் 27–28 (வெள்ளி, சனி) ஆகிய நாட்களில் நடைபெறும்

தலைவர்: ஈ. வி. கே. சம்பத் எம். பி.

திறப்பாளர்: டாக்டர். எஸ். அருணாசலம் எம். பி., பி. எஸ்.

அறிஞர் அண்ணா, — நெடுஞ்செழியன்

மற்றும் கழகச் சொற்பொழிவாளர்கள் கலந்து கொள்வார்கள். இரண்டு நாட்களிலும் நாடகங்கள் உண்டு.

—கலைக்குமார், அமைப்பாளர், விளம்பரக் குழு —கி. மனோகரன், வரவேற்புக் குழுத் தலைவர்.

"மன்றம்" அச்சகத்தில் (93, பிராட்வே, சென்னை-1. தமிழ்நாடு) ஆசிரியர், இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. உதவி ஆசிரியர்: இரா. செழியன், எம். ஏ.—(தொலை பேசி எண்: 55